விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 12 ஞாயிற்றுக்கிழமை (26.03.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 97

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இராணுவத் தாக்குதலைக் கண்டித்து மாணவ சமூகம் நாளை பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழிநுட்ப நிறுவனத்தினுள் புகுந்து மாணவர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து நாளை யாழ்.குடாநாட்டு மாணவ சமூகம் தமது கற்றல் செயற்பாட்டை பகிஷ்கரிக்கவுள்ளனர்.

இதற்கான ஏற்பாட்டை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.யாழ்.உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் எவ்வித ஆர்ப்பாட்டமோ, ஊர்வலமோ, வன்முறையோ இல்லாது நாட்டுப்பற்றாளர் அன்னைபூபதியின் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நிகழ்வுகளைக் குழப்பி மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் தாக்கியதுடன் நிறுவனச் சொத்துக்களையும் இராணுவம் சேதப்படுத்தியுள்ளது.

இது ஒரு யுத்தநிறுத்த மீறலாகும்.எனவே இச் சம்பவத்தைக் கண்டித்து யாழ்.குடாநாட்டு பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் மற்றும் உயர் கல்வி மாணவர்கள் அனைவரும் தமது கற்றல் செயற்பாட்டை பகிஷ்கரித்து மாணவ சமூகத்தின் ஒட்டு மொத்த எதிர்ப்பினை இராணுவத்திற்கு வெளிக்காட்டுவோம் என யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இராணுவ பஸ் மோதி குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்திப்பகுதியில் இராணுவ பஸ் மோதியதில் குடும் பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.


இச் சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றது. பலாலி வீதி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது எதிரே வந்த இராணுவ பஸ் மோதியதால் இவ் விபத்து ஏற்பட்டது.

இதன்போது சுதுமலையைச் சேர்ந்த குமாரசுவாமி மகாதேவன் (வயது 38) என்ற குடும்பஸ்தர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டி கடற்பரப்பில் வைத்து

# சோதனையிட முயன்ற படகு வெடித்ததில் கடற்படையின் டோறாப் படகு மூழ்கியது

## 8 கடற்படையினரை காணவில்லை



(புத்தளம்)

புத்தளம் கற்பிட்டி குதிரைமலை கடற் பகுதியில் கடற்படையின் டோறாப் படகொன்று நேற்று நண்பகல் 12 மணியளவில் வெடித்துச் சிதறியது. இதன்போது அதிலிருந்த 8 கடற்படையினரைக் காணவில்லை என தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் படகு என சந்தேகிக்கப்படும் படகொன்றை கடற்படையின் டோறாப் படகு சோதனையிடச் சென்றபோது அப்படகு வெடித்துச் சிதறியதாகவும் அப்போது கடற்படையின் டோறாப்படகும் சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் தாக்குதலை தொடங்குவோம்! மட்டு.,அம்பாறை மக்கள்படை எச்சிரிக்கை

அண்மைக்காலமாக தமிழ் மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள், இராணுவம் மற்றும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களினால் கடத்தப்பட்டு படுகொலைகள் மற்றும் பல்வேறு தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இந் நிலையில் இத் தாக்குதல்களை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மீண்டும் எமது பணிதொடங்கவுள்ளோம் என மட்.அம்பாறை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படையணி துண்டு பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்ட படி ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களை களையாது அவர்களுக்கு பொலிஸ் இராணுவம் மற்றும் இராணுவப்புலனாய்வுத்துறையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் .

களுவாஞ்சிக்குடியில் கடத்தப்பட்ட யுவதி மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் கடத்தப்பட்டு இது வரையில் எதுவுமே தெரியாதவிடத்து மேலும் மாணவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் வெட்டிக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார். வாழைச்சேனை குறிஞ்சி நகரைச் சேர்ந்த குலதுங்க றெஜிக்காந் (வயது 26) என்ற இளைஞர் கடத்திச் செல்லப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமகால நிலைமைகள் தொடர்பாக க.கா.தலைவர் புலிகளுடன் பேச்சு

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலனை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்று சந்தித்துப் பேசினார்.திருமலை மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற இச் சந்திப்பில் அண்மைய நாட்களாக படையினர் தரையிலும் கடலிலும் மேற்கொண்ட தாக்குதல்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவருடனுன் மாவட்ட கண்காணிப்புக்குழுவின் தலைவரும் இச் சந்திப்பில் பங்கேற்றார். இதேவேளை நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பானு புதிய கண்காணிப்புக் குழுத் தலைவருடன் சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது. (ச-4)


## ஏப்ரல் 7 இல் சு.க.மாநாடு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் 7 ஆம் திகதி நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது. இம் மாநாட்டின்போது ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கட்சிக்குள் தற்போது நிலவும்பிரச்சினைகள் ,நிலைமைகள் குறித்தும் இம் மாநாட்டின் போது பேச்சுவார்த்தைகளை நடத்தி (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# தவறுக்கு வருந்தாத உள்ளங்களால் பிறருக்கு மன்னிப்பை வழங்க முடியாது

'கடவுளுக்குப் பயப்படுதலே இறைஞானத்தின் ஆரம்பம்' இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரின்



வார்த்தைகளைப் பல முறைகள் புறக்கணித்தார்கள். அதன் விளைவு அவர்கள் அந்நிய நாட்டுக்கு, நாடு கடத்தப்பட்டு அடிமை வாழ்வை மேற் கொண்டார்கள்.

அங்கே இறைவ னின் அருள் அரசனுக்கு அளிக்கப்பட்டமையி னால் அரசன் இறைவனுக்கு அஞ்சி இஸ்ராயேலரை மீண்டும் இஸ்ராயேல் நாட்டுக்குச் செல்ல அனுமதித்தார்.

இறைவனுக்கு பயந்து வாழ் கின்ற வாழ்வு ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ளது. இறைவனுக்கு அன்பு செய்வது என்பது பிறரிடம் கொள்ளும் அன்பிலேதான் தங்கி யுள்ளது. இதனாலேதான் கடவுளின் அருள்வளம் பெறப்படுவது துன்பத் தின் வழியிலே அது சிலுவையின் வழியிலே என்று கூறப்படுகின்றது.

## இயேசுவுக்காகவே வாழ்தல்

ஒவ்வொரு மனிதனும் செய்த பாவத்தின் வினையாகவே இயேசு எல்லோருக்காகவும் இறந்தார்.

## பரமபிதாகாட்டிய பாதை

இயேசுக்கிறிஸ்துவோடு இணைந்த நிலையிலேயே நாம் அவருடைய உயிர்த்தெழுதல் மூலமாக நாமும் உயிர்த்தெழவும் செய்துள்ளார். எனவே எமது வாழ்வானது விலை கொடுத்து அதாவது கிறிஸ்துவின் விலைமதிக்க முடியாத இரத்தத் தினாலே வாங்கப்பட்டது என்பதை நாம் உணர்வதில்லை.

நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் கிறிஸ்துவுக்காகவே வாழ வேண் டியவர்கள். நற்செயல்புரிவதே அவருக்கு உகந்ததாக இருப்பதால் நற்செயல் புரிவதே நாம் செய்ய வேண்டிய நற்செய்திப் பணியாக இருக்கின்றது.

## நம்பிக்கையின் சாட்சிகள்

இயேசுக் கிறிஸ்துவினாலே மீட்கப்பட்ட நாம் இயேசுக்கிறிஸ் துவிலே நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும். அப்போதே நாம் வரப் போகும் தண்டனைத் தீர்ப்புக்குத் தப்பலாம். உலகத்தின் மாதிரிகை களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்தால் அது இருளின்பாதையிலே எம்மைத் தள்ளிவிடும். உலக இன்பங்கள் ஆசாபாசங்கள் எல்லாம் கடவுளிட மிருந்து எம்மைப் பிரித்துவிடும்.

நாம் ஒளியின் மக்களாக இயே சுக்கிறிஸ்துவின் மேல்வைத்த நம் பிக்கையினால் ஆக்கப்பட்டோம். ஒளியைப் பிரதிபலிப்பவராக வாழ் வதே கிறிஸ்தவனின் கடமையாகும். மாறாக தீங்கு செய்வதிலும், வன்மம் சாதிப்பதிலும், அநியாயம் செய்வதிலும், அழிவு செய் வதிலும் ஈடுபடுவோமானால் அந்த ஒளியை விடுத்து இருளின் பாதைக்கு இழுத்துச் செல்லப்படுகின்றோம்.

## மன்னிப்பே மாபெரும் கொடை

அன்பைத்தவிர மனித மனதை மாற்றும் சக்தி வேறு எதற்கும் இல்லை. கடவுளின் அன்பை உணர்ந்து கொள்ளும் காலமே இத் தவக்காலமாகும். சக்தி மிகுந்த இறைவன் சக்தியினால் அல்ல. அன்பினாலேதான் எம்மை ஆட் கொண்டார். அந்த வழயிலேதான் நாம் மற்றவர்களுடன் வாழவேண் டும் என்பதைக் காட்டிச் சென்றார். 'மனிதத்தின் ஆழமான தேவை யும் மிகவுயர்ந்த சாதனையுமாக இருப்பது மன்னிப்பதே' ஆகும் என்று ஹரஸ் என்ற இறையிலாளர் குறிப்பிடுகின்றார். மன்னிக்காத போது இறை அன்பைப் பெற்றுக் கொள்ளவே முடியாது.

## மன்னிப்பே மனதை மாற்றும்

இயேசு இவ்வுலகில் செய்த பணி மன்னிப்பின் மூலமே யாவரையும் மனம் மாறப் பண்ணினார். மகனே உன் பாவங்கள் மன்னிக் கப்பட்டன. மகளே உன் பாவங்கள் மன்னிக் கப்பட்டன என்ற வார்த் தைகளை நற்செய்தி நமக்கு தருகின்றது.

வருந்தாத உள்ளங்களால் மன்னிப்பை அளிக்க முடியாது. திருந்தாத உள்ளங்களால் கடவுள் அன்பைப் பெற முடியாது. பொருந் தாத செய்கையினால் கடவுளின் மனதை மாற்றமுடியாது.

அன்ரனி பீற்றர்

அன்பும் மன்னிப்பும் அருளைப் பெறும் சாதனங்கள். அன்பினா லே மன்னிக்கலாம். மன்னிப்பதாலே அன்பைப் பெறலாம். இயேசுவின் வாழ்வை பின்பற்றும் நாம் சிலுவை யின் அன்பிலே சிலுவையின் மன்னிப்பிலே எம்மை இணைத்துக் கொள்வோம். அவர் அருளாலே அவர் தாழ்பணிந்து அன்பின் சாட்சிகளாவோம். □


## சிறு விளம்பரம்

### நோயாளிகளின் கவனத்திற்கு

உங்கள் வியாதிகள் கண்டு பிடிக்க முடியாதவையா? நாட்பட் டவையா? மாற்றமுடியாது என வைத்தியர்கள் பலர் கைவிரித்து விட்டார்களா?

கவலை வேண்டாம்! எங்களை நாடுகள். ஷென்மென் அக்குபன் சர் வைத்தியசாலை, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (மியுசிக் வேர்ல்ட் முன்பாக) (199)


## வர்த்தகர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

வவுனியா சாத்திரி கூழாங் குளத்தில் நேற்றுமுன்தினம் வர்த் தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட் டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மற்று மொருவர் படுகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

வவுனியா சிவன் கோயிலுக்கு அருகில் பலசரக்கு கடையொன்றை நடத்திவரும் இவர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த போது, வெள்ளை வானில் சென்ற சிலர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுதப்பிச்சென்றுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுட்டுக் கொல்லப்பட்டவர் 40 வயதுடைய தில்லையா-முரு கேசு எனவும் காயமடைந்தவர் 32 வயது டைய றமேஸ் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-9)

## 2015ஆம் ஆண்டளவில் 85 சதவீதமானோருக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலக்கிற்கமைய 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத் தொகையில் 85 சதவீதமானோ ருக்கு சுத்தமான குடிநீரை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத் துள்ளது.

சுத்தமான குடிநீர் மனித வாழ் வுக்கும், சுகாதாரப் பாதுகாப்புக் கும் அவசியமாகுமென்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள நீர் வழங் கலைப் பாதுகாப்பதன் மூலம் மேலும் பல பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர்வழங்க முடியுமென்று அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை எமது பிரதேசத் திலுள்ள நீரூற்று, நீர்க்குமிழ், நீர்ப்படலம், நீர்வீழ்ச்சி, ஆறு, குளம் ஆகியவற்றை மாசடைய விடாமல் பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டுமென்றும் உலக நீர்த்தினம் கொண்டாடப்படும் இவ் வேளையில் அமைச்சர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (க-7)

## இராசி பலன்

**26.03.2006**
**(பங்குனி 12, ஞாயிற்றுக்கிழமை)**
**துவாதசி முன்னிரவு 11.34மணிவரை**
**அவிட்டம் பின்னிரவு 12.35மணிவரை**
**இராகுகாலம் 4.45-6.15மணிவரை**
**சுபநேரம் 9.15-10.45மணிவரை**
**4வது தவக்கால ஞாயிறு**

- **மேடம்**: குடும்ப சுகம், தெய்வசிந்தை, நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம்.
- **இடபம்**: அதகாரம், நண்பர்கள் சந்திப்பு, சுபநிகழ்வு, நல்ல செய்தி.
- **மிதுனம்**: பித்த ரோகம், கட்டுப்பாடு, பிதாசிந்தை, திடீர் பயணம்.
- **கடகம்**: ஆரோக்கியக் குறைவு, அபகீர்த்தி, முயற்சி தாமதம், போசனசுகம்.
- **சிங்கம்**: நல்ல வரவேற்பு, தொழில்சிந்தை, முயற்சி கைகூடும், உற்சாகம்.
- **கன்னி**: புதிய விடயம், முயற்சி கைகூடும், வாக்கு மேன்மை, போசனசுகம்.
- **துலாம்**: அமைதிக்குறைவு, பணவிரயம், ரோக நிலை, தொழில்சிந்தை.
- **விருச்சிகம்**: மனச்சஞ்சலம், தாய்வழி உறவு, சுப செலவு, காரியதாமதம்:
- **தனுசு**: உறவினர் சந்திப்பு, வாக்குமேன்மை, காரிய சித்தி, பொருள் சேர்க்கை.
- **மகரம்**: அதிகாரிகள் சந்திப்பு, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், பணவிரயம்.
- **கும்பம்**: கற்பனை மிகுதி, போசனசுகம், முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு.
- **மீனம்**: இடமாற்றம், காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, போசன சுகக்குறைவு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

தொழில்நுட்ப நிறுவனத் தாக்குதல் சம்பவம்;

## உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வில் ஈடுபட்டிருந்த யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாண வர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தன மான தாக்குதல் சம்பவத்துக்கு உயர்கல்வி நிறுவ னங்களின் மாணவர் அமையம் கண்டனம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக அமையம் விடுத்துள்ள அறிக் கையில்,

தமிழ் மக்களின் விடிவுக்காக உண்ணா நோன் பிருந்துசாவைத்தழுவிக்கொண்ட தியாக தீபம் அன்னை பூபதியின் 19ஆம் ஆண்டு நிகழ்வுகள், தமிழீழ தேசமெங்கும் இடம் பெற்று வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் அந்த உன்ன தமான நிகழ்வு யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத் தில் இடம்பெற்றபோது அங்கு அத்துமீறி உள் நுழைந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர் களை கண்மூடித்தனமாகத் தாக்கி யதுடன், கொடிக்கம்பத்தையும் கழற்றி எறிந்து தொழில் நுட்பக் கல்லூரி கட்டங்களையும் சேதப்படுத்தியுள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக மாணவிகளும் தாக்கப்பட் டுள்ளனர்.

இச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின் றோம். அதுமட்டுமன்றி நாட்டுக்காக சாவடைந்த தியாக தீபம் அன்னை பூபதி தாயின் படங்களை கிழித் தெறிந்த படையினரின் செயல் மிகவும் கேவலமான ஒன்றாகும். இவ்வாறு இராணுவத்தினரின் அடாவடித் தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுமாயின் மிக மோசமான சூழல்வெகுவிரைவில்தோற்றுவிக்கப்படும்.

வெறுமனே கையில் கொப்பி புத்தகங்களுடனும், பேனாக்களுடனும் தமது உணர்வுகளை வெளிப்ப டுத்தும் மாணவர்களை ஆயுதமுனையில், பவள் கவச வாகனங்கள் சகிதம் வந்து அடித் தும் சுட்டும் அடக்க நினைக்கும் இராணுவத்தளபதிகளின் செயலானது மாணவர்களை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் செய லாகும். இராணுவத் தளபதியிடம் ஒன்றை கேட்கின்ற றோம். தமிழ் மக்களையும், மாணவர்களையும் அழிப்பது தான் உங்கள் முடிவு என்றால் நேரடியாக யுத்தத்திற் குள் செல்லுங்கள்.

அதைவிடுத்து அடித்து, சுட்டு வெருட்டி எம்மை அடக்கி விட லாம் என்று பகல் கனவு காண வேண்டாம். அது நடக்காது. ஏனெனில் நாங்கள் பிறந்து வளர்ந்தது கற்றுக் கொண்டது எல்லாம் உங்கள் ஆக்கிரமிப்புக் குள்தான். எனவே நாம் ஓயமாட்டோம் என்றுள்ளது.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம், உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர் ஒன்றியம் என்பனவும் கண்டனம் தெரிவித்துள்ளன. (கு)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் கோர வடுக்களை சித்தரிக்கும் நினைவுச் சிற்பம்

(பொன்னாலை)

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் கோரவடுக்களைச் சித்தரிக்கும் நினைவுச் சிற்பம் ஒன்று முதல் தடவையாக யாழ்ப்பாணம்-மல்லா கத்தில் உருவாக்கப்பட்டுவருகின்றது.

மல்லாகத்தைச் சேர்ந்த கலா பூசணம் ஏ.வி. ஆனந்தன் என்ற சிற்பக் கலைஞரே இந்த நினைவுச் சிற்பத்தை வடிவமைத்து வருகின் றார்.

8அடி உயரமும் 10அடி விட்டமும் கொண்டதான இச் சிற்பம் முற்று முழுதாக மரத்தினால் செதுக்கப் பட்டு வருகின்றது.

இணையத்தளங்களில் வெளி யான ஆயிரக்கணக்கான ஆழிப் பேரலை அனர்த்தக் காட்சிகளை இச் சிற்பத்தில் சிற்பக் கலைஞர் வடித்து வருவது சிறப்புமிக்கதொன் றாகக் காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் -வடமராட்சி முதல்காலி மாவட்டக் கரையோரம் வரையான பகுதிகளில் நடந்த ஆழிப்பேரலை அனர்த்தங்கள் முழுவதும் இம் மரச் சிற்பத்தில் வெளிப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது, அலைகளால் மனிதர்கள் கொடூரமாக அடித்துச் செல்லப்படு வது, இக்கடுவவில் 500 பேரை ரயில் பெட்டியுடன் அடித்துச் சென்ற காட்சி, கல்முனை பேபி 81இன் முகம் , கால் நடைகள் துடிதுடித்து இறந்தகோரம், கட்டட அழிவுகள் மற்றும் பல அழிவுகள் இச் சிற்பத் தில் வெளிப்படுத்தப்படவிருக்கின் றன.

ஆழிப்பேரலையின்பின் உலகில் இதுவரையில் எவரும் சிந்தித்திராத அதிநுட்பம் வாய்ந்த கலையம்சங் களுடன் இச் சிற்பம் படைக்கப்பட்டு வருகின்றது.

வடிவமைக்கப்பட்டு வரும் சிற்பம் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத் தில் மக்கள் பார்வைக்கு காட்சிப் படுத்தப்படவுள்ளதென்று சிற்பிக் கலைஞர் கலாபூஷணம் ஏ.வி. ஆனந்தன் தெரிவிக்கின்றார். (க-49)

## கட்டட வசதியின்றி இயங்கும் தபாலகம்

(மன்னார்)

மன்னார் முருங்கன் பிரதேச தபாலகம் பொலிஸாரின் முழுமை யான பாவனையில் உள்ளதால் இந்தத் தபாலகம் தற்காலிக கொட் டகையில் நிரந்தரக் கட்டட வசதி யின்றி இயங்கி வருகின்றது.

இருமாடிகளைக் கொண்ட வசதி களுடன் கூடிய இந்தத் தபா லகம் 1990 ஆம் ஆண்டு அமைக் கப் பட்டது. தற்போது பொலிஸா ரின் ஆக்கிரமிப்பில் உள்ளதால் கொட்டகையில் இயங்கி வருகின் றது. (த-7)

# எத்தனை காலம்தான் ஏமாறுவது? கஜேந்திரகுமார் எம்.பி.செவ்வி

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் ஒரு யுத்த சூழ் நிலைதான் உள்ளது என்று இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.



கொழும்பு ஆங்கில ஊடகம்ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்தார்.

அந்த நேர்காணலில் அவர் பல கேள்விகளுக்கு காத்திரமாக பதிலளித்தார்.

***கேள்வி:-*** விடுதலைப்புலிகள் போருக்குத் தயாராகின்றனரா?

***பதில்:-*** அது வெளிப்படையாக கண்ணுக்குத் தெரியக் கூடியது கடந்த 4 ஆண்டு காலமாக மக்களின் மனிதாபிமான பிரச்சினைகள் தொடர்பில் எதுவித அர்த்தமுள்ள செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்த இலங்கை அரசாங்கமும் அரச படைகளும் திட்டமிட்டு துணை இராணுவக் குழுக்களை பயன்படுத்துகின்றன. இந்த சூழ்நிலையில் ஜெனீவாப்பேச்சுக்களின் துணை இராணுவக் குழு தொடர்பாக எட்டப்பட்ட உடன்பாட்டை செயற்படுத்தவில்லை எனில் இந்த அமைதி முயற்சிகள் தோல்வியடைந்ததாக விடுதலைப்புலிகள் எண்ணக்கூடும் என்று நான் கருதுகிறேன். விடுதலைப்புலிகள் போருக்கு தயாராகவில்லை என்பது உண்மையல்ல. அது போல் அரசாங்கமும் தயாராகி வருகிறது என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. ஏதேனும் குறிப்பிடத்தக்க அரசியல் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டால் இராணுவ அணுகு முறைகளை இரு தரப்பும் குறைக்கலாம்.

ஆனால் அப்படியான எதுவும் நடக்கப் போவதில்லை. யுத்தம் மீண்டும் உருவாகின்ற சூழலே அதிகம் காணப்படுகிறது.

***கேள்வி:-*** துணை இராணுவக்குழுவினரது ஆயுதக்களைவு தொடர்பாக கடந்த புதன்கிழமை விடுதலைப்புலிகள் காலகெடு வித்துள்ளனர். ஆனால் அரசாங்கம் அப்படியான குழு இல்லை என்கிறதே?

***பதில்:-*** அரசாங்கம் என்ன பதில் கூறினாலும் துணை இராணுவக்குழுக்கள் விடையத்தில் செயற்படவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு .அரசாங்கப்படைகளுடன் துணை இராணுவக்குழுக்கள் சேர்ந்து இயங்குவதால் அதை விடுதலைப்புலிகள் பாரதூரமானதாக கருதுகின்றனர். விடுதலைப் புலிகள் வலிமையினால்தான் பேச்சுவார்த்தை நடைபெற்றது. விடுதலைப்புலிகள் பலவீனப் படுத்தப்படுவதை நாம் விரும்பவில்லை. துணைக்குழுக்களை அரசாங்கம் களைய வேண்டும்.

***கேள்வி:-*** ஆனால் துணை இராணுவக் குழுவினரை ஆதரிக்கவில்லை என்கிறதே அரசாங்கம்?

***பதில்:-*** வடக்கு-கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் அங்கு என்ன நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அதற்கு அப்பால் அரசாங்க கட்டுப் பாட்டுப்பகுதியில் துணை இராணுவக்குழுக்கள் இயங்குவது அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

அப்படியான நிலையில் அரசாங்கத் துக்கு பொறுப்பு இல்லை என்றால் யார் அதைச் செய்வது? அரசாங்கம் கண்ணை மூடிக் கொண்டு இருப்பதாக நாங்கள் சொல்லி விட வில்லை. விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசாங்கத்துடன் துணை இராணுவக் குழுவினர் இணைந்து செயற்படுகின்றனர்.

***கேள்வி:-*** கருணா விடயமானது விடுதலைப்புலிகளின் பிரச்சினை விடுதலைப் புலிகளின் உள் பிரச்சினையில் ஏன் அரசாங்கம் தலையிடவேண்டும்?

***பதில் :-*** எது அரசாங்கத்திற்கு முதன்மையானது? அமைதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஓர் அரசாங்கம் அது பேச்சுக்களை நடத்திக்கொண்டிருக்கிற விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிற போது அரசாங்கமே பதிலளிக்க வேண்டும். துணை இராணுவக்குழு விடையம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெளிவாகச்சொல்லப்பட்டுள்ளது.

இந்த துணை இராணுவக்குழுக்களுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கிறது. ஆனால் சமாளிப்பதற்காக விடுதலைப்புலிகளின் பிரச்சினை என்கிறது அரசாங்கம். அரசாங்கமும் இதில் தொடர்பு பட்டிருக்கிறது.

பேச்சுக்கள் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதை அரசாங்கம் விரும்பினால் இதை அரசாங்கம் மதிக்கவேண்டும் என்பது தான் விடுதலைப்புலிகள் விடுத்திருக்கும் செய்தி. அரசாங்கம் அதைச் செய்யா விட்டால் விடுதலைப்புலிகள் அதைச்செய்வார்கள்.

***கேள்வி:-*** அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் அரசியல் அலுவலகங்கள் திறக்கப்படுவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

குழந்தைகளை அரசியல் நிகழ்வுகளுக்குப் பயன்படுத்துதல், விடுதலைப்புலிகளின் கொடியேற்றல் ஆகியவற்றை தடைசெய் துள்ளது. அரசாங்கம் இதை விடுதலைப் புலிகள் நிராகரிப்பதை எப்படி நியாயப்படுத்துவீர்கள்?

***பதில்:-*** இந்த நிபந்தனைகள் தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை. பொதுவாக விடுதலைப்புலிகள் அரசியல் பணிகளை மேற்கொள்வதை யுத்த நிறுத்த ஒப்பந்தம் அனுமதிக்கிறது. உங்கள் கேள்விக்கான பதில் ஒப்பந்தத்தில் உள்ளது. அரசாங்கம் இதைச்செய்யாதவிடத்து கடைசியாக நோர்வே அதைச் செய்யும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக நாம் பேசுகிறோம் அதனடிப்படையில் இதை அணுக வேண்டும். இரு தரப்புக்குமிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டியதுபுதியஜனாதிபதிக்கு முக்கியமானது. அதை விடுத்து விடுதலைப்புலிகளின் அரசியல் பணிகளுக்கு முட்டுக்கட்டையிடுவது எதிர்விளைவுகளைத் தான் உருவாக்கும். இனவிரோதக்கோட்பாடு உள்ள அணியிலிருந்து வந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு இதைச்செய்கின்ற பொறுப்பு உண்டு.

***கேள்வி:-*** பெரும்பான்மை சிங்களவர்கள் அமைதிப்பேச்சுக்கள் ஊடே பிரச்சினைக்கு தீர்வு காண மஹிந்தவை ஆதரிப்பதாக கருத்துக்கணிப்பு வெளியாகியுள்ளதே?

***பதில்:-*** மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் வெளியிட்டிருக்கும் அந்த அறிக்கையில் பெரும்பான்மை மக்கள் அமைதியைத்தான் விரும்புகின்றனர். இன விரோத கோட்பாடு என்பது என்ன மாதிரியான தீர்வு என்பதாகும். மஹிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சிக்கோட்பாடு என்கிறார்.

நாங்கள் சுய நிர்ணய உரிமை பற்றி பேசுகிறோம். ஒஸ்லோவில் வெளியிடப்பட ஆகக் குறைந்த பட்ச நிலையிலான அதிகாரப் பகிர்வைக்கூட நிராகரித்துள்ளனர். 1994ஆம் ஆண்டு மஹிந்தவின் சுதந்திரக்கட்சி ஏற்றுக் கொண்ட நிலைப்பாட்டையும் அவர் நிராகரிக்கிறார்.

***கேள்வி:-*** கூட்டாட்சி வாய்ப்புப்பற்றி பேசியது ஐக்கியதேசியக் கட்சி. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி மீது நம்பிக்கை வைத்த பெரும்பான்மை வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் விடுதலைப்புலிகள் தடுத்துவிட்டனர்?

***பதில்:-*** தமிழ் மக்கள் வாக்களிக்க வில்லை என்பது உண்மை. ஐக்கியதேசியக் கட்சி கடந்த சில ஆண்டுகளாக கடைபிடித்து வந்த கொள்கைகளை பெரும்பன்மை சிங்களவர்கள் ஏற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமானது சிறுபான்மை கட்சிகளின் உதவிகளுடன் தான் இயங்கி யது.

***கேள்வி:-*** அரசாங்கத்தில் ஜே.வி. பி, ஜாதிகஹெல உறுமய இணைந்துள்ளமை பற்றி ?

***பதில்:-*** வெளிப்படையாக கவலையளிக்கிறது இனப்பிரச்சினையை தங்களது சுய அரசியல் இலாபங்களுக்காக ஜே.வி.பி. கையாள்கிறது. இலங்கையின் முதன்மைக் கட்சியாக முன்வரவே இந்த பிரச்சினையை ஜே.வி.பி. கையில் எடுக்கின்றது. இனப்பிரச்சினைக்குதீர்வு காண ஜே.வி.பியிடம் இருந்து அரசாங்கம் விலகியிருக்கவேண்டும்.

***கேள்வி:-*** ஜே.வி.பி. யும் ஜாதிகஹெல உறுமயவும் தீவிரவாதிகள் என்கிறீர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரையும் அவர் கள் அப்படியே பார்கின்றனர். இரண்டுக்குமான வேறுபாடு ?

***பதில்:-*** சிங்களத்தேசியத்துடன் எமக்கு பிரச்சினை இல்லை. தேசிய வாதியாக இருப்பதில் தவறில்லை. ஆனால் எதிர்த்தேசியத்தை நிராகரிப்பது என்பது தீவிரவாதமாக இருக்க வேண்டும் இல்லையெனில் இனவாதமாக இருக்கவேண்டும் தமிழ்த் தேசியத்துக்கும்



சிங்களத்தேசியத்திற்கும் பிரச்சினை இல்லாமல் இருந்தது. ஆனால் தமிழ் தேசியத்தின் உரிமைகளை அரசாங்காம் எப்போது மறுக்கத்தொடங்கியதோ அப்போது பிரச் சினை உருவானது.

***கேள்வி:-*** தமிழ் மக்களின் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்று பாலசிங்கம் கூறியுள்ளார்? இது சரியா?

***பதில்:-*** ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகியவற்றை ஒரு மாற்றுத்தலைமையாக உருவாக்க முயற்சிப்பதை நாம் நிராகரிக்கிறோம். இவைகள் அனைத்தும் துணை இராணுவக்குழுக்கள், துணை இராணுவக் குழுவின் பணிகளைத்தான் செய்கின்றனர்.

ஆனந்தசங்கரியை பொறுத்தவரையில் அவர் மக்களால்நிராகரிக்கப்பட்டவர் சுவட்ரசுக் கட்சியின் 50 ஆண்டு கால கொள்கைகளுக்கு எதிராக செயற்படுபவரை எப்படி ஏற்க முடியும்? அவர் பரப்புரை செய்வதை தடுக்கும் முடிவு எப்போதும் எடுக்கவில்லை.

***கேள்வி:-*** ஜிகாத்குழு என்ற முஸ்லிம் குழு இயங்குவதாக புலிகள் கூறுகின்றனர். ஆனால் முஸ்லிம்கள் மறுக்கின்றனரே?

***பதில்:-*** இந்த அரச படையினர் முஸ்லிம்களை பயன்படுத்துகின்றனர். என்பது அறிந்தது. முஸ்லிம் ஆயுக்குழுக்வை கட்டமைக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பது தான் வருத்தத்திற்குரியது.

***கேள்வி:-*** நோர்வே அனுசரணையாளர்களை வெளியேறக்கோருகிறது. ஜே. வி.பி...

***பதில்:-*** நோர்வே வெளியேறும் போது இங்கே அமைதி முயற்சிகள் முறிவடையும்.

கேள்வி:- அமைதி முயற்சிகளில் விடுதலைப்புலிகள் எத்தகைய ஈடுபாட்டுடன் உள்ளனர்?

***பதில்:-*** அனைத்து ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் இருந்த போதும் பேச்சுக்களில் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்.

நாங்கள் இப்போது காத்திருக்கிறோம். ஆனால் நீண்ட காலத்திற்கு காத்திருப் போமா என்று கூறமுடியாது. (து)

## ஹெல உறுமயவின் கருத்துக்கள் கவலை தருகிறது- அத்த நாயக்க

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தை ஜனநாயக வழிமுறைக்கு கொண்டுவருவதற்காக சர்வதேச சமூகம் உட்பட இலங்கையின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் மிகவும் கஷ்ரகரமான முயற்சிகளை மேற்கொண்டுவரும் போது ஜாதிகஹெல உறுமய இனவாதத்தை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவது வேதனைக்குரிய விடயமாகும் என்றும் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித் துள்ளது.

புலிகள் ஆயுதங்களை கீழே வைக்காவிட் டால் நாங்களும் ஆயுதங்களை ஏந்துவோம் என்று ஜாதிகஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்கரணவக்க தெரிவித்துள்ளமை தொடர்பாக கருத்துக்கேட்ட போது ஐ.தே.கவின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது ,

ஜாதிகஹெல உறுமய இனவாதத்தை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுவருகின்றது.

உண்மையில் மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பாக ஆர்வத்தினை ஏற்படுத்தும் வகையிலேயே கருத்துக்களை வெளியிடவேண்டும்.

புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்று இலங்கை உட்பட முழு சர்வதேசமும் குரல் கொடுத்து வருகின்றது.

புலிகளை ஜனநாயக வழிமுறைக்கு கொண்டுவரமுடியுமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் நாங்களும் ஆயுதங்களை ஏந்துவோம் என்று ஜாதிகஹெல உறுமய கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாத வாதமாகும். 1971ஆம் ஆண்டில் மற்றும் 1988/1989களில் தெற்கில் சில சக்திகள் ஆயுதங்களை ஏந்தியமையினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களை நாம் மறந்துவிடக்கூடாது. ஆயுதங்களால் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரமுடியாது என்பதனை உணர்ந்தே அனைத்துத்தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்.

இந் நிலையில் ஆயுதங்களை ஏந்துவோம் என்று இன்னொரு குழுவினர் கூறுவது என்ன விதத்தில் நியாயமாகும் என்றார். (க)

## மாபெரும் தொழில்நுட்ப நகராக கண்டி மாறும்

கண்டியை மாபெரும் தொழிநுட்ப நகராக மாற்றியமைப்பதற்கான திட்டம்ஒன்றுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பூரண அங்கிகாரம் அளித் துள்ளார் என்று உள்நாட் டலுவல்கள் அமைச்சர் சரத் அமுனுகம தெரி வித்தார். இந்தியாவில் பெங்களூருக்கு சமமான ஒரு தொழில் நுட்ப நகராக மாற்றுவதற்கு ரிய நகரம் இலங்கையில் கண்டியே என்று அமைச்சர் கூறினார். இத்திட் டத்துக்கான ஏற்பாடுகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. (க-7)

## இறை தியான வழிபாடுகள்

போல் றொபின்சன் அடிகளாரின் இறை தியான வழிபாடுகள் நாளை திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத் திலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு குருநகர் புனிதயாகப்பர் ஆலயத்திலும் அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு நவாலி புனித இராயப்பர் ஆலயத்திலும் இடம்பெறும் என இந் நிகழ் வின் ஒழுங்கமைப்பாளர் அன்ரன் மத்தாயஸ் அடிக ளார் தெரிவித்துள்ளார். (க)

# இன்று ஒரு தகவல்

## சுற்றுச்சூழல்

இது வரைக்கும் நாம் அடிக்கடி கவலைப்பட்டது மனிதனிடமிருந்து மனிதனைக் காப்பாற்றுவது எப்படி என்பதற்காகத்தான். ஆனால் இனிமேல் அதைவிடப் பெரிய கவலை ஒன்று வந்துவிட்டது அது என்னவென்றால் மனிதனிடமிருந்து பூமியைக் காப்பாற்றுவது எப்படி? இதுதான் இன்று பெரிய கவலை.

மனிதனுக்குக் கோபம் வந்தால் "சூடாகிவிட்டான்" என்று சொல்வது உண்டு. இப்போது பூமிக்குக்கோபம் வந்துவிட்டது. அது சூடாகிக்கொண்டிருக்கிறது. பூமிக்குக் கோபத்தை உண்டாக்கியது யார்? மனிதன்தான். இன்னும் 25 வருடத்தில் பூமியின் உஷ்ணம் சராசரி 1முதல் 2 டிகிரி வரை அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சில பகுதிகளில் 6 டிகிரி வரை கூட அதிகம் ஆகலாமாம் சரி... ஆகிவிட்டுப் போகட்டும்...அதனால் நமக்கென்னவென்று இருந்து விடமுடியாது. அதனால் பல பாதகவிளைவுகள் ஏற்படும் உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

பூமியின் வெப்பம் அதிகரிக்கும் போது வடதுருவம் தென் துருவம் இங்கெல்லாம் இருக்கும் பிரம்மாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். அதனால் கடல் மட்டம் உயரும் பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகிவிடும். உலகம் முழுவதும் கடலோரப் பகுதிகள் மூழ்கும். அங்கிருப்பவர்கள் எல்லோரும் வேறிடம் பார்க்க வேண்டியதுதான்.

உதாரணத்திற்கு கடல்மட்டம் ஒரு மீற்றர் உயர்ந்தால் வங்கதேசத்தில் 4லிருந்து 8 கோடி மக்கள் வேறிடம் தேட வேண்டியிருக்கும். சரி... பூமி கோபப்படும் அளவுக்கு மனிதன் என்ன தவறு செய்தான். இயற்கையின் சமநிலையைக் கெடுத்துவிட்டான். நாம் பிராணவாயுவை எடுத்துக்கொண்டு காபனீரொட்சைட்டை வெளியே விடுகிறோம் இந்த ஒட்சைட்டை மரம், செடி, கொடிகள் எடுத்துக்கொண்டு பிராணவாயுவை வெளிவிடுகிறது.

இது ஒழுங்காக நடந்து கொண்டிருந்தால் சரி... ஆனால் காடுகளை மனிதன் அழிக்க ஆரம்பித்தான். காபனீரொட்சைட் சேர்ந்து விட்டது. அதையெல்லாம் மாற்றிக்கொடுப்பதுயார் இதைத் [illegible]த் விர வாகனங்கள், தொழிற்சாலைகள் விடும் புகையும் காற்றில் கலக்கிறது. சூரியன் உமிழும் அல்ட்ரா வயலட் கதிர்களிடமிருந்து உயிரினங்களைப் பாதுகாக்கும் கேடயம் [illegible]சோன் படலம் இது தேய்ந்து கொண்டே வருகின்றது.

C.F.C என்று சொல்லப்படும் குளோரோபுளோரோ காபன் இந்த ரக ரசாயனத்தை ரெப்ரிஜ்ரேட்டர் ஏர் கண்டிஷணர் தீயணைப்புக் கருவிகள் இதிலெல்லாம் குளிர்ச்சியை ஏற்படுத்துவதற்காக உபயோகப்படுத்துகிறோம். இது தான் ஓசோனுக்கு எமன். C.F.C ஒரு மலிக்யூல் ஒரு இலட்சம் ஓசோன் மலிக்யூலை அழிக்கக் கூடியதாம் இதற்கு மாற்றும் பொருள் கண்டு பிடிக்கவேண்டும்.

இயற்கையுடன் அனுசரித்துப் போக வேண்டியதன் அவசியத்தை இப்போதுதான் தீவிரமாக உணர ஆரம்பித்திருக்கிறோம். அதற்காகத்தான் உலகத் தலைவர்கள் ஒன்று கூடி யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த உலகத்தில் மரம், செடி,கொடிகள், மிருகங்கள் ,பறவைகள் எல்லாம் நலமாக இருந்தால்தான் நாமும் நலமாக இருக்கமுடியும். குஜராத்தின் வட பகுதியில் ஆரவல்லிக்குன்றும் சரிவின் மையத்தில் மிருகங்கள் பறவைகளுக்கு என்றே ஒரு கோயில் இருக்கிறது. அதில் பறவைகள் மிருகங்கள் சிற்பங்கள்தான் இருக்கிறது. கர்ப்பக்கிரகத்திலும் அதேசிலைகள்தான் அங்கே வணங்கப்படும். தெய்வங்கள் பறவைகளும் விலங்குகளும் தான்.

தெய்வீகக் கதைகளிலெல்லாம் தெய்வங்கள் மிருகங்களையும் பறவைகளையும் வாகனமாக வைத்திருப்பது எதற்காக? அவற்றின் மதிப்பைபுரிந்து கொள்வதற்காகத்தான் அசோக மன்னர் சாலையோரத்தில் மரங்கள் நட்டார் என்று சரித்திரத்தில் படிக்கிறோம். அவர் என்ன விபரம் தெரியாமலா செய்தார். மிருகங்களுக்கும் மருத்துவமனைகள் நிறுவினார். அசோகர் என்றும் படிக்கிறோமே. கி.பி.17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல நீதிசாரம் அது ஒலைச் சுவடியாக இருக்கிறது. தமிழ் நாடு தொல்லியல் துறை தர்மபுரியில் அதைக்கண்டுபிடித்து எடுத்திருக்கிறது.

அதில் என்ன எழுதியிருக்கிறது. தெரியுமா? மரம் வளர்த்தால் நரகம் இல்லை என்று எழுதியிருக்கிறது. அந்த அளவுக்கு அப்போதே தெரிந்து வைத்திருக்கிறார்கள் ஆல், அரசு, வேம்பு போன்ற மரங்களையெல்லாம் தெய்வமாக நினைத்து வழிபடும் பழக்கம் இப்போதும் கூட உண்டு. இருந்தும் என்ன பிரயோசனம்? உலகச் சுற்றுச் சூழல் மிகவும் கெட்டு விட்டதாமே இனி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். படைப்புக்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது.

சிலர் எதற்கும் கவலைப்படுவதில்லை மிகவும் அலட்சியம் அலுவலக நண்பர் ஒருவரிடம் நான் சீரியசாக சொல்லிக்கொண்டிருந்தேன் இப்படியே போய்க்கொண்டிருந்தால் ஒரு நாள் பெரியபிரலயமே வந்துவிடும். கடல் கொந்தளிக்கும் சூறாவளி வீசும் எரிமலை வெடிக்கும் பூகம்பம் வரும் என்றேன் அவர் மிகவும் சாவகாசமாக என்னைப் பார்த்து அன்று அலுவலகத்திற்கு விடுமுறை விடுவார்களா? என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தீர்வினை நோக்கிய சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு பல தடைகளுக்கு மத்தியிலும் முன்னெடுத்துச் செல்லப்டுகிறது. இந்நிலையில் இதற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சிலர் சிறுசிறு சம்பவங்களில் ஈடுபட்டு வருவது தவிர்க்கப்படவேண்டும். தீர்வினை நோக்கிய பேச்சுவார்த்தை என்ற பயணத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் விட்டுக்கொடுத்து செயல்படவேண்டும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**

பதுளையில் உள்ள ஊவா நூலக சேவை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பிரசார கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சமாதான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும்போது விரும்பத்தகாத விடயங்கள் நடக்கலாம் அது பற்றி பேச்சுவார்த்தை மேசையில் எடுத்தியம்ப வேண்டும். புரிந்துணர்வுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதே சாலச்சிறந்ததாகும்.

எது எப்படியிருப்பினும் யுத்த சூழல் அற்ற பூமியாக இலங்கை மாறவேண்டும் அதில்தான் இந்நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. இந்நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் உறுதிப்படுத்தப்படுவதன் மூலம் தான் நாம் முன்னெடுக்கும் அபிவிருத்தித்திட்டங்கள் பூரண பயனைத்தரும் .

யுத்த சூழல் நாட்டில் தொடர்ந்து இருக்குமாயின்எந்தவொரு அபிவிருத்தித் திட்டமும் பயனளிக்காது நாடு ஜனாதிபதியிடமும் உள்ளூராட்சி மன்றங்கள் பிறிதொரு கட்சியிடம் இருப்பதினால் இந்நாட்டிற்கு எத்தகைய பயனும் கிடைக்காது.

ஆகவே நாடு ஜனாதி பதியின் பொறுப்பில் இருப்பதுபோன்றே உள்ளூராட்சி மன்றங்களும் ஜனாதிபதி சார்ந்த கட்சியின் பொறுப்பிலிருக்கவேண்டும்.

அப்போதுதான் இந்நாட்டில் பாரிய அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க முடியும். தவறின் இரு தரப்பினருக்கிடையே இழுபறி நிலை தொடர்ந்த வண்ணம் இருக்கும் இது நாட்டிற்கு ஆரோக்கிய மான சூழலைத் தோற்றுவிக்காது.'

மஹிந்த சிந்தனை அடிப்படையிலான வேலைத் திட்டங்களை நோக்கிய பயணம் வெற்றியடைய வேண்டுமானால் நாடும் உள்ளூராட்சி மன்றங்களும் நேர் வழியில் செல்லவேண்டும். ஆகவே விருப்புவாக்குகளைப் பெற்றுக்கொள்ள எடுக்கும் பிரயத்தனங்களை வெற்றிலை சின்னத்தின் வெற்றியை உறுதிப் படுத்தும் வகையில் எமது செயல்பாடுகள் அமைய வேண்டும் என்றார்.

(க)

# யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் மீதான தாக்குதலுக்கு த.தே.விழிப்புணர்வுக் கழகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வில் ஈடுபட்டிருந்த யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய கண் மூடித்தனமான தாக்குதல் சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாக தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக குறித்த கழகம் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தின் அட்டூழியங்களும் அராஜகங்களும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே செல்கிறது. ஆயுத முனையில் எமது மக்களையும் மாணவர்களையும் அடக்கி எமது உணர்வை அடக்க முனைகிறது.

இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் தாம் முழு மனதுடன் செயற்படுகின்றோம் எனக் கூறிக்கொண்டு மறுபக்கத்தில் எம் மீது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

இந்த அராஜகத்தின் வெளிப்பாடே உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் மீதான தாக்குதலாகும். நேற்று முன்தினம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் தேசத்திற்காக உன்னா நோன்பிருந்து மடிந்த தியாக தீபம் அன்னை பூபதிக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

எமது தேசியக்கொடி ஏற்றப்படுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இதனை இராணுவம் புரிந்து கொள்ளவேண்டும்.

எந்தவொரு நாட்டிலும்நாட்டுக்காக மடிந்த வர்களுக்கு எல்லாராலும் மதிக்கப்படுவது வழக்கம் ஆனால் இராணுவம் இதை விளங்கிக் கொள்ளாதுள்ளது.

நேற்று முன்தினம் காலை இராணுவத்தினர் பவல் கவசவாகனங்கள் சகிதம் உயர்தொழில் நுட்ப நிறுவன வளாகத் தினுள் புகுந்து மாணவர்களைத் தாக்கியதுடன் அலுவலகத்தினுள் புகுந்து அலுவலகத்தை சேதமாக் கியுள்ளனர்.

பூபதித்தாயின் படத்தினையும், கொடிக்கம்பத்தினையும் எடுத்துச்சென்றுள்ளதுடன் மாணவர்களின் கையடக்கத்தொலைபேசிகளையும் வீடியோக் கமராக்களையும் பறித்து சென்றுள்ளனர். அத்துடன் அவர்களுக்கு கொலை மிரட்டலையும் விடுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவங்கள் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையிலேயே நடைபெற்றுள்ளது: இதற்கு கண்காணிப்புக்குழுவினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் எடுத்துச் சென்றவற்றை உடனடியாக ஒப்படைக்கவேண்டும் என கேட்டுக்கொள்வதுடன் இந்தச் செயலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றுள்ளது. (க)

# புள்ளி விபரப்படிவங்களை ஒப்படைக்குமாறு அறிவிப்பு

சாவகச்சேரியில் யுனிசெப் அனுசரணையுடன் இழந்த கல்வியை மீட்டல் தொடர்பான செயற்திட்டம் கடந்த 11ஆம் திகதி நடாத்தப்பட்டது.

இம் மதிப்பீட்டுப்பரீட்சை II இன் புள்ளி விபரப்படிவங்களை 27ஆம் திகதி வலயக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வலயப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (க-108)

# 17 படையினரை யாழ்.மேல்நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு

(கிளிநொச்சி)

இராணுவத்தில் சக சிப்பாயை பகிடிவதைக்குள்ளாக்கி மரணம் விளைவித்த வழக்கில் தொடர்புடைய 17 படையினரையும் மேலதிக விசாரணைக்காக யாழ். மேல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த சாவ கச்சேரி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம்திகதி முகமாலை முன்னரங்க நிலையில் சக படையினரின் பகிடிவதைக்குள்ளாகிய சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இது தெடார்பான விசாரணை கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு சாவகச் சேரி நீதி மன்றில் நீதிபதி அ. பிறேமசங்கர் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. எதிர்த்தரப்பு சாட்சியங்களை அளிக்குமாறு குற்றம் சாட்டப்பட்டுள்ள படையினரை நீதிபதி அழைத்தார்.

எனினும் இவ்வாக்கு மூலத்தினை யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைகளின் போது அளிக்க விரும்புவதாக அந்தப் 17 படையினரும் தமது சட்டத்தரணி யூடாக நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து 17 பேரையும் விசாரணைக்காக யாழ். மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நீதிபதி உத்தரவிட்டார். (க)



கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வின் போது வருகை தந்த வடமராட்சி வலய திட்டமிடல் பிரிவு கல்விப்பணிப்பாளர் நந்தகுமாருக்கு கல்லூரி மாணவர் மன்றத் தலைவன்சிவபாலன் மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும் அருகே கல்லூரி அதிபர் சிறிராமச்சந்திரனும் ஆசிரியர் கருணாநிதியும் நிற்பதைபடத்தில் காணலாம்.

(படம்:-துன்னாலை நிருபர்)

# ஆயுதக் குழுக்களும் அவதியுறும் மக்களும்



ஆயுதக்குழுக்களின் விவகாரம் இன்று ஒரு அரசியல் விவகாரமாகிவிட்டது. செத்தபிணத்தை வைத்து பணம் சம்பாதிப்பது போல கேவலமான முறையில் ஆயுதக் குழு விடயமானது அரசியல் விவகாரமாகியுள்ளது.

உண்மையில் இது தொடர்பில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள மோசமான பாதிப்புகள் பற்றி யாரும் கவனத்தில் எடுத்துக்கொண்டதாக தெரியவில்லை. இளையவர்கள் கடத்தப்படுகிறார்கள். வியாபாரிகளிடம் பலவந்தமாக கப்பம் வசூலிக்கப்படுகிறது. விடுதலைப்புலிகளை பழிவாங்குவதாகக் கூறிக்கொண்டு அவர்களின் உறவினர்கள் கொல்லப்படுகிறார்கள். காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் நடைபெறுகின்றன. குறிப்பாக கிழக்கில் மக்கள் சுதந்திரமாக வெளியில் நடமாட பயப்படுகின்ற நிலை தோன்றியுள்ளது. இது மிகவும் பயங்கரமான ஒரு நிலையாகும்.

உண்மையில் இவ்வாறான ஆயுததாரிகளால் அரசபடையின் ஆதரவு இல்லாமல் இவ்விதம் துணிகரமாக செயற்பட முடியாது என்பது வெளிப்படையானது. அவ்விதம் தொடர்பு உள்ளது என்பதை ஊடகங்கள் பல தடவைகளில் வெளிப்படுத்தியுள்ளன. அதேபோல கண்காணிப்புக் குழுவும் அரச பகுதிகளில் ஆயுதக்குழு செயற்படுவதாக தெரிவித்துள்ளது. மேலும், பல அமைப்புகளும், சர்வதேச நிறுவனங்களும், இதனையே தெரிவித்துள்ளன.

எனவே, அரசாங்கமானது இதுவெல்லாம் தெரியாமல் இருப்பதுபோல் நடந்தாலும் அது நம்பக்கூடியதாக இல்லை. மேலும் விடுதலைப் புலிகளும் இவ்விவகாரத்தை தமக்கு சாதகமாக பார்க்கிறார்களே ஒழிய மக்கள் பக்கமிருந்து பார்ப்பதாக தெரியவில்லை. கருணா குழு என்பது கூட விடுதலைப்புலிகளில் இருந்துதான் உருவானது என்பதானது இவ்விடயத்தை மேலும் சிக்கலாக்கியுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

எவ்வாறெனினும், அரசாங்கம் இந்த ஆயுதக்குழு விவகாரத்தை வைத்து கண்ணாம்பூச்சி விளையாடுவதனை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாததாகும். எனவே இதற்கு எதிராக விடுதலைப்புலிகள் மட்டுமல்லாது பல தரப்புகளும் ஒன்றுசேர்ந்து குரல் எழுப்புவதே இன்றைய தேவையாக உள்ளது.

– சுயாதீனன்

# கருத்தாடல் களம்

## ஒட்டுப்படைகள் சமாதானத்தின் எதிரிகள்

எங்களது கிழக்குப்பிரதேசத்தில் இயங்கி வருகின்ற ஒட்டுப்படைகளது பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவர்கள் கடத்தல்களிலும், கப்பம் கேட்பதிலும், குற்றச்செயல்களிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதனால் எமது பிரதேசத்தின் இயல்பு நிலை குழம்பியுள்ளது. எம்மால் அன்றாட நடவடிக்கைகளில் நிம்மதியாக ஈடுபட முடியவில்லை. தற்போது கூட மூன்று மாணவர்கள் கடத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது போன்ற செயற்பாடுகளால் மக்கள் உறைந்து போயுள்ளனர். இவர்களை சமாதானத்தின் எதிரிகளாகவே மக்கள் பார்க்கிறார்கள். ஜெனீவாவில் இந்த ஒட்டுப்படைகளை கட்டுப்படுத்துவதாக ஏற்றுக்கொண்ட அரசாங்கம் இதனை கண்டும் காணாமலிருப்பது எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ஆர். தவநாயகம், மட்டக்களப்பு

## முஸ்லிம்களிடம் ஆயுதக்குழு இல்லை

முஸ்லிம்களிடையே அயுதக்குழு இருக்கிறது என்ற கதை கசியவிடப்பட்டுள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். இது ஜனநாயக ரீதியாக தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற, அவதானத்தை வேண்டி நிற்கின்ற, ஒரு சிறுபான்மை இனக்குழுமத்திற்கு செய்கின்ற அநீதியாகவே உள்ளது.

சில முஸ்லிம் தனிநபர்களிடம் ஆயுதம் இருப்பதற்கும், சில தமிழ் அல்லது சிங்கள தனிநபர்களிடம் ஆயுதம் இருப்பதற்கும் வித்தியாசம் என்ன? இவ்வாறு சட்டவிரோத ஆயுதம் தாங்கியவர்களை ஏனைய இனத்தவர்களைப் போல சட்டவிரோதிகளாக, ஆயுத நபர்களாக ஏன் இனங்காட்டப்படவில்லை என்பது கேள்விக்குரியதாகும்.

முகமட் அன்சார், கிண்ணியா

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டி.பி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

## என்னை மறந்துவிடுங்கள்

நான்
கற்பழிக்கப்பட்டதையும்
களங்கப்படுத்தப்பட்டதையும்
உங்கள் அரசியல் இருக்கைகளுக்கு
அழகுக் கால்களாக்கினீர்கள்


மணிக் கணக்கில் பேசியும்
பக்கம் பக்கமாய் எழுதியும்
ஓராயிரம் தடவைகள்
என்னைக் கற்பழிக்கின்றீர்கள்

மன்றாடிக்கேட்கிறேன்
என்னை மறந்துவிடுங்கள்

கற்போடு வாழ்வோரை
காப்பாற்றுவது எப்படியென
கடுகளவாவது சிந்தியுங்கள்

அது மட்டுமே
என் காயங்களுக்கு
நீங்கள் காட்டும் ஔடதமாகிவிடும்

– சூரியநிலா
யாழ்ப்பாணம்




## இவ்வார விழிப்பில்...


- முஸ்லிம்களும் தனித்தரப்பு விவகாரமும்
- சமாதான நிகழ்வுகள்
- பேசாலை - இழப்பும் தேவையும்
- மேல்கொத்மலை திட்டமும் மக்களது பயமும்
- உடப்பு – காட்சிக்கோவை
- காலி தமிழர்கள்

ரீ.என்.எல் - செவ்வாய் இரவு 7.25 மணிக்கு

# கண்டது.. கேட்டது.. படித்தது..

## முரண்பாடும் மோதலும்

கொன்ப்லிக்ட் (Conflict) என்ற ஆங்கிலப் பதம் முரண்பாடு எனவும் கொன்ப்லிக்ட் ரெசலூசன் (Conflict resolution) என்பது முரண்பாட்டு தீர்வு எனவும் பொதுவாக தமிழில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பதப் பிரயோகத்தில் அடிப்படையான ஒரு தவறு காணப்படுகின்றது. அதாவது முரண்பாடு என்கின்ற தமிழ் பதம் கொன்பிலிகட் என்கின்ற ஆங்கிலப் பதத்தின்



கருத்தை சரிவர பிரதிபலிப்பதில்லை. மோதல் தீர்வியலுடன் தொடர்புடைய பல்வேறு எண்ணகருக்களையும் மொழிபெயர்க்கின்ற பொழுது சரியான அதே கருத்தை வெளிப்படுத்துகின்ற தமிழ் பதங்களை பயன்படுத்துவது சற்றுக்கடினமானதே.

ஆயினும் கொன்பிலக் என்பதை சரியாக அர்த்தப்படுத்தக்கூடிய மோதல் என்கின்ற பதம் இருக்கும் நிலையில் முரண்பாடு என்பது பயன்படுத்தப்பட்டுவருவது தவறானது எனக் கருதப்படலாம். ஏனெனில் மோதல் என்பதும் முரண்பாடு என்பதும் இருவேறுபட்ட விடயங்களாகும். முரண்பாடு என்பது ஒப்பீட்டளவில் மென்மையான ஒரு விடயம் என்பதுடன் அது மோதலாக இருக்க வேண்டும் என்கின்ற அவசியமில்லை. உதாரணமாக ஒரு ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் இரு உறுப்பினர்கள் குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றி வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பார்களாயின் அது "முரண்பாடு" எனப்படலாம். ஆனால் அதே உறுப்பினர்கள் தமது கருத்துக்களை நியாயப்படுத்துவதாக தீவிரவாத பிரதிவாதங்களிலோ அல்லது கைகலப்பிலோ ஈடுபடுவார்களேயானால் அது "மோதல்" ஆகும்.

முரண்பாடுகள் மோதல்களாக மாற்றமுறக்கூடும் என்பதனால் அவை மோதல்களின் ஆரம்பம் எனக் கருதப்படலாம். அதேசமயம் அவை மோதல்களாக மாற்றமடையாமல் இருப்பதற்கும் சந்தர்ப்பமுண்டு. எனவே மோதல் என்பதும் முரண்பாடு என்பதும் ஒரே அர்த்தத்தை உடையவையல்ல. அதாவது முரண்பாடு கொன்ட்ரடிக்ஷன் (contradiction) என்பதை சரியாக அர்த்தப்படுத்துகின்றதேயன்றி கொன்ப்லிக்ட் என்பதையல்ல.

கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன் எழுதிய சமூக மோதல்கள் ஓர் கோட்பாட்டு அறிமுகம் என்ற நூலில் இருந்து பெறப்பட்டது

# அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 22

1. சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும், சர்வதேசிய ஒத்துழைப்பு மூலமும் ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும் வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும், தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கும், இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.



# மலையக அரசியலின் எதிர்காலம்

முதலாளித்துவ தொழிற்சங்க தலைவர்கள் தமது தொழிற்சங்க ஆதிக்கத்தை அரசியலுக்குள் புகுத்தியதன் விளைவாக, உண்மையான அரசியல் முன்னெடுப்புகள் பாராளுமன்ற ஆசன எண்ணிக்கையினாலும், அமைச்சு பதவிகளினாலும் தீர்மானிக்கின்ற விடயமாக மாறிவிட்டிருக்கின்றன.

1977ல் சௌமியமூர்த்தி தொண்டமான் பாராளுமன்ற உறுப்பினரானதும் ஜே. ஆர் அரசாங்கத்திற்கு தாக்கு பிடித்து அமைச்சு பதவியை பெற்றுக் கொண்டமை மலையக அரசியலுக்கு மண்ணை வாரி போட்ட அடித்தளமாகிவிட்டது. "ஆளுங்கட்சியுடன் இருந்தால் தான் உரிமை பெறலாம். அமைச்சு பதவி இருந்தால்தான் சேவைசெய்யலாம்" எனும் பொய் மாயைகள் மக்களிடத்தில் தோற்றுவிக்கப்பட்டு இன்னும் 'அரசியல் சித்தாந்தமாக காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. 1994 வரையான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெவ்வேறு அமைச்சுப் பதவிகளையும், இணைஅமைச்சு பதவிகளையும் வகித்து வந்தது. இதில் கால்நடை அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி, சுற்றுலாத்துறை, போக்குவரத்து என எல்லாவற்றிலுமே மலையக மக்களுக்கு சேவையாற்றக்கூடிய துறைகள் தான் அமைச்சுக்களாக இருந்தன. இதில் மலையக மக்கள் எத்துணை தூரத்திற்கு நன்மை பெற்றார்கள்? ஆகக்குறைந்த மலையகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இத்துறைகளில் சாதாரண தொழில் வாய்ப்புக்களையேனும் பெற்றுக்கொடுக்கப்பட்டதா? பதவி வகித்த தலைவர்களும் அதன் பரிவாரங்களும் சாராய தவறணை உரிமையாளர்களாகி, அதன் மூலம் செல்வந்தர்களானார்கள். இதுதவிர பிரஜாவுரிமை பெற்றதாக பிதற்றிக் கொள்கிறார்கள்.

இவர்களின் அரசியலில் எந்த கட்டத்தில் அதனை ஒரு பிரச்சினையாக (Issue) முன்வைத்து வெற்றி பெற்றார்கள், திம்பு கோட்பாட்டில் அது ஒரு கோரிக்கையாக முன்வைக்கப்பட்டமையே பிரஜாவுரிமை பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய விடயமாக கொள்ளலாம். தவிர, இன்றும் நடைமுறையில் இந்த பிரச்சினை முற்று முழுதாக தீர்க்கப்படவில்லை.

1994ல் பொதுவாக ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் இன்னொரு வடிவில் வந்த தொண்டமானான சந்திரசேகரனுக்கு அமைச்சு பதவி வழங்கப்பட்டது. அதனால் என்ன சாதிக்க முடிந்தது? ஜனாதிபதி சந்திரிகா தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என தனியான அமைச்சினை உருவாக்கி கொடுத்தார். அதனால் இன்றுவரை என்ன சாதிக்கப்பட்டுள்ளது? அதுவும் 1994ல் சந்திரசேகரனின் ஒரு ஆசனத்தினால்தான் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்தது. அன்று கேட்டுப்பெற முடியாத அரசியல் உரிமைகள், சலுகைகளா இனி பெற்றுக்கொள்ளப் போகிறார்கள்? ஆக, மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்து அமைச்சுப்பதவி பெற்றால்தான் ?அரசியல்? எனும் கருத்து நிலவுகின்றவரை மலையக அரசியல் நிலை கவலைக்கிடந்தான். அமைச்சுப்பதவிகளை வைத்து செய்யக்கூடிய கருமங்கள் என்ன என்பதை சிறுபான்மை சமூகம் என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் பாடம் கற்றுக்கொள்ளலாம். முஸ்லிம் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்களையாவது அவை பெற்றுக் கொடுத்துள்ளன.

இப்போது மீண்டும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் "அமைச்சுப் பதவி அரசியலை" தூக்கிப்பிடித்து நிற்கின்றன. இவர்கள் கடந்த இரண்டு மாதகாலமாக அமைச்சுப் பதவி இல்லாமல் இருந்த காலத்தை, முற்போக்கு அரசியல் பேசும், இடதுசாரிகள் கூட பத்திரிகையில் 'மலையகத்தில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற' நிலை என குறிப்பிடப்பட்டிருந்தமையானது, ஆறுமாதத்தில் அமைச்சு பிம்பம் மக்களிடத்தில் எவ்விதங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை காட்டுகிறது. ஒருபுறம் தொழிற்சங்க பங்களிப்புகள் இல்லாமையால் அரசியல் களம் இறங்குவது எந்தளவுக்கு நடைமுறை சாத்தியமானது எனும் கேள்வியும் எழுகின்றது. தொழிற்சங்க கட்டுமானத்தின் ஊடாகவும், தெளிவான அரசியல் சிரத்தையின் ஊடாகவும் 'மலையக அரசியிலில்' புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இதைத்தான் எல்லோரும் பத்திரிகையில் 'மூன்றாவது அணி' வேண்டும் என கொச்சையாக எழுதுகிறார்கள். இந்த சொல்லாடல் இலங்கை தொழிலாளர் காங்கிஸுக்கும், மலையக மக்கள் முன்னணிக்கும் இவர்களே கொடுக்கின்ற அங்கீகாரம். ஆகவே, இப்போது தேவைப்படுவது 'முதலாவது' அரசியல் அணியே தவிர, மூன்றாவது அணி அல்ல.

– பழ. மதிராஜன்
ஹட்டன்

விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

22

## எல்லைக் கோட்டுக்கு அப்பால்... சிக்ஸர்கள்

சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் விளையாட ஆரம்பித்து தனது கிரிக்கெற் பருவகாலத்தில் அதிக சிக்ஸர் அடித்தவர்களைப் பார்ப்போம்.

அவ்வரிசையில் முதலிடத்தில் இருப்பவர் பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் அதி ரடி ஆட்டக்காரருமான சஹிட் அப்ரிடி.

219 போட்டிகளில் விளையாடியுள்ள அப்ரிடி 215 சிக்ஸர்களை விளாசியுள்ளார். ஆனால் இவர் பெற்ற ஓட்ட எண்ணிக்கை 4819. அடித்த சதம் 4. விரைவாக ஓட்டங்களைக் குவிக்கக்கூடிய இவர் விரைவாக ஆட்டமிழந்து அணி வீரர்களினதும், ரசிகர்களினதும் எதிர்பார்ப்பை வீணாக்கி விடுவார்.

இவருக்கு அடுத்தப்படியாக இருப்பவர் இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவரும், நம்பிக்கை நட்சத்திரமுமான 36 வயதான சனத் ஜெயசூர்யா. 315 போட்டிகளில் விளையாடியுள்ள சனத் 10625 ஓட்டங்களைப் பெற்றதோடு 201 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

இவ்வரிசையில் மூன்றாவது இடத்தில் இருப்பவர் இந்திய அணியின் முன்னாள் தலைவரும் ஆரம் பத் துடுப்பாட்ட வீரருமான சௌரவ் கங்குலி. தற்போது கிரிக்கெற் வாழ்க்கையையே கேள்விக் குறியாக்கியுள்ள கங்குலி 279 போட்டிகளில் விளையாடி 10123 ஓட்டங்களைப் பெற்றுள்ளதோடு 168 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

இவர்களுக்கு அடுத்ததாக நியூஸிலாந்து அணியின் கிறிஸ் கெய்ன்ஸ் (4950) -153, இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர் (14146)-149, பாகிஸ்தானின் அணித் தலைவர் இன்சமாம்- உல்- ஹக் (11251)-137, மேற்கிந்தியா வின் விவியன் றிச்சார்ட்ஸ் (6721)- 126, பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் வஸீம் அக்ரம் (3717) -121, அவுஸ்தி ரேலிய அணியின் தலைவர் றிக்கி பொண்டிங் (9191)-119, அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அடம் கில்கிறிஸ்ட் (8125) -117, மேற்கிந் திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் பிறைன் லாரா (9359) -110, இலங்கையணியின் அரவிந்த டிசில்வா (9284) -102 சிக்ஸர்களையும் விளாசி அடுத்தடுத்த நிலையிலுள்ளனர்.

இதேவேளை, போட்டியொன்றில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் இருப்பவர் இலங்கையணியின் சனத் ஜெயசூர்யா. பாகிஸ்தான் அணிக்கெதிராக சிங்கப்பூரில் 1995/96 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற போட்டியில் 134 ஓட்டங்களைப் பெற்றார். இதில் சனத் 11 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.

இதேவேளை 11 சிக்ஸர்களை விளையாடியுள்ள பாகிஸ்தான் அணியின் அதிரடி ஆட்டக்காரர் சஹிட் அப்ரிடி இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இலங்கையணிக்கு எதிராக நைரோபியில் 1996/97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடை பெற்ற போட்டியில் இவர் 102 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவ்வரிசையில் மூன்றாம் இடத்தில் இருப்பவர் இந்திய அணியின் விக்கெற் காப்பாளரும்/ அதிரடி ஆட்டக்காரருமான மகேந்திர சிங் டோனி. இவர் இலங்கையணிக்கு எதிராக ஜெய்ப்பூரில் நடைபெற்ற போட்டியில் ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்களைப் பெற்றதோடு 10 சிக்ஸர்களையும் தனது பங்கிற்கு விளாசியுள்ளார்.

இவர்களுக்கு அடுத்தபடியாக 9 சிக்ஸர்களை விளாசியுள்ள பாகிஸ்தான் அணியின் இர்ஷாத் அஹமட், சஹிட் அப்ரிடி, நியூஸிலாந்து அணியின் லூயிவின் சன்ட், அவுஸ்திரேலிய அணியின் றிக்கி பொண்டிங் ஆகியோர் அடுத் தடுத்துள்ளனர்.

**நோயல்**

## குறைந்த பந்தில் சதம் / அரைச்சதம்

இலங்கையணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் 4/10/1996 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் குறைந்த பந்தில் சதம் அடித்து சாதனை படைக்கப்பட்டது.

பாகிஸ்தான் அணியின் சஹிட் அப்ரிடி 37 பந்தில் 102 ஓட்டங்களைப் பெற்று இச்சாதனையைப் படைத்தார். இதில் 11 சிக்ஸர்களும், 6 நான்கு ஓட்டங்களும் அடங்கும்.

இவருக்கு அடுத்தபடியாக மேற்கிந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் பிறைன் லாரா, பங்களாதேஷ் அணிக்கெதிராக 45 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்ஸர்கள், 18 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக தனது சதத்தினைப் பெற்றார். ஆனால் இவர் இப்போட்டியில் 117 ஓட்டங்களைப் பெற்றார்.

மீண்டும் பாகிஸ்தானின் சஹிட் அப்ரிடி இந்திய அணிக்கெதிராக 45 பந்துகளில் (102) 9 சிக்ஸர்கள், 10 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக தனது சதத்தினைப் பூர்த்தி செய்தார்.

இலங்கையணியின் சனத் ஜெயசூர்யா 48 பந்துகளில் (134) 11 சிக்ஸர்களும் 11 நான்கு ஓட்டங்களும் அடங்கலாக தனது சதத்தினைப் பூர்த்தி செய்து அடுத்ததாகவுள்ளார்.

இதேவேளை, குறைந்த பந்தில் அரைச்சதம் அடித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் இருப்பவர் இலங்கையணியின் சனத் ஜெயசூர்யா, பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இவர் 17 பந்துகளை எதிர்கொண்டு (76) 5 சிக்ஸர்கள், 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக தனது அரைச்சதத்தினைப் பூர்த்தி செய்தார்.

இவருக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலியாவின் டொனெல் 18 பந்துகளிலும் (6X6, 4X4), பாகிஸ்தானின் சஹிட் அப்ரிடி 18 பந்துகளில் இருமுறை தனது அரைச்சதத்தினைப் பூர்த்தி செய்துள்ளார்.

அடுத்து தென்ஆபிரிக்க அணியின் விக்கெற் காப்பாளர் 19 பந்துகளில் (6X6, 4X2) அரைச்சதத்தினைப் பூர்த்தி செய்து ஐந்தாம் இடத்தில் உள்ளார்.

## வெகு வேகமாக....

| 1000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற் இந்.) | 21 | 7 | 153* | 71.42 | 1975 To 1979/80 |
| சி.கிறீனிட்ஜ் (மேற்இந்.) | 23 | 4 | 106* | 52.63 | 1975 To 1980 |
| ஜி.ரேணர் (நியூ.) | 24 | 7 | 171* | 58.82 | 1972/73 To 1982/83 |
| யசீர் ஹமீட் (பாக்.) | 24 | 2 | 127* | 45.45 | 2003 To 2003/04 |

| 2000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சகீர் அப்பாஸ் (பாக்.) | 45 | 6 | 123 | 51.28 | 1974 To 1983/84 |
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற் இந்.) | 48 | 8 | 153* | 50.00 | 1975 To 1983 |
| சி.கிறீனிட்ஜ் (மேற் இந்.) | 49 | 6 | 106* | 46.51 | 1972/73 To 1983/84 |
| கெரி கிஸ்டன் (தென் ஆபி) | 50 | 6 | 188* | 44.45 | 2003 To 1996/97 |

| 3000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற் இந்.) | 69 | 12 | 153* | 52.63 | 1975 To 1984 |
| சி.கிறீனிட்ஜ் (மேற்இந்) | 72 | 8 | 115 | 46.87 | 1975 To 1986/87 |
| கெரிகிஸ்டன் (தென்.ஆ) | 72 | 9 | 188* | 47.61 | 1983/84 To 1997/98 |
| ஜி.கொக் (இங்.) | 76 | 4 | 142 | 41.66 | 1976 To 1989/90 |

| 4000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற் இந்.) | 88 | 15 | 189* | 54.79 | 1975 To 1984/85 |
| சி.கிறீனிட்ஜ் (மேற்இந்.) | 96 | 10 | 133* | 46.51 | 1975 To 1988 |
| பிறைன் லாரா (மேற் இந்.) | 100 | 9 | 169 | 43.95 | 1990/91 To 1995/96 |
| டீன் ஜோன்ஸ் (அவுஸ்) | 102 | 21 | 183 | 49.38 | 1983/84 To 1990/91 |

| 5000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற் இந்.) | 114 | 20 | 189* | 53.19 | 1975 To 1986/87 |
| பிறைன் லாரா (மேற்இந்.) | 118 | 13 | 169 | 47.61 | 1990/91 To 1997/98 |
| சி.கிறீனிட்ஜ் (மேற் இந்.) | 121 | 13 | 133* | 46.29 | 1975 To 1990/91 |
| சௌரவ் கங்குலி (இந்.) | 126 | 11 | 183 | 43.47 | 1991/92 To 1999/00 |

| 6000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| விவிலியன் றிச்சர்ட்ஸ் (மேற் இந்.) | 141 | 22 | 189* | 50.42 | 1975 To 1988/89 |
| சௌரவ் கங்குலி (இந்.) | 147 | 14 | 183 | 45.11 | 1991/92 To 2000/01 |
| பிறைன் லாரா (மேற் இந்.) | 155 | 16 | 169 | 43.16 | 1990/91 To 1999/00 |
| டீன்ஜோன்ஸ் (அவுஸ்) | 157 | 26 | 145 | 45.80 | 1983/84 To 1993/94 |

| 7000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சௌரவ் கங்குலி (இந்.) | 174 | 15 | 183 | 44.02 | 1991/92 To 2001/02 |
| பிறைன்லாரா (மேற்இந்) | 183 | 18 | 169 | 42.42 | 1990/91 To 2000/01 |
| டி.கெய்ன்ஸ் (மேற்இந்.) | 187 | 24 | 152 | 42.94 | 1977/78 To 1991/92 |
| ஜக்கலிஸ் (அவுஸ்) | 188 | 36 | 139 | 46.05 | 1995/96 To 2004 |

| 8000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சௌரவ்கங்குலி (இந்.) | 200 | 16 | 183 | 43.47 | 1991/92 To 2002/03 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்.) | 210 | 22 | 143 | 42.55 | 1989/90 To 1999 |
| பிறைன்லாரா (மேற் இந்.) | 211 | 22 | 169 | 42.32 | 1990/91 To 2002/03 |
| சஹிட் அன்பர் (பாக்.) | 218 | 18 | 194 | 40.00 | 1988/89 To 2000/01 |

| 9000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சௌரவ் கங்குலி (இந்.) | 228 | 20 | 183 | 43.26 | 1991/92 To 2003/04 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்.) | 235 | 23 | 186* | 42.45 | 1989/90 To 1990/91 |
| பிறைன்லாரா (மேற் இந்.) | 239 | 27 | 169 | 42.45 | 1990/91 To 2004/05 |
| றிக்கி பொண்டிங் (அவுஸ்) | 242 | 30 | 145 | 42.45 | 1974/75 To 2005/06 |

| 10000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சச்சின் டெண்டுல்கர் (இந்.) | 259 | 23 | 186* | 42.37 | 1989/90 To 2000/01 |
| சௌரவ் கங்குலி (இந்.) | 263 | 21 | 183 | 41.32 | 1991/92 To 2005 |
| இன்சமாம் உல்- ஹக் (பாக்.) | 299 | 43 | 137* | 39.06 | 1991/92 To 2004 |
| சனத் ஜெயசூர்யா (இல.) | 328 | 16 | 189 | 32.05 | 1989/90 To 2005 |


| 11000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சச்சின் டெண்டுல்கர் (இந்.) | 276 | 26 | 186* | 44.00 | 1989/90 To 2001/02 |
| இன்சமாம் உல்- ஹக் (பாக்.) | 324 | 48 | 137* | 39.85 | 1991/92 To 2005/06 |

| 12000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சச்சின்டெண்டுல்கர் (இந்.) | 300 | 31 | 186* | 44.60 | 1989/90 To 2002/03 |

| 13000 ஓட்டங்கள் | இனிங்ஸ் | ஆட்டம் இழக்காமல் | அதிகூடிய ஓட்டம் | சராசரி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| சச்சின் டெண்டுல்கர் (இந்.) | 321 | 32 | 186* | 44.98 | 1989/90 To 2003/04 |

(அடுத்தவாரம் தொடரும்...)

## பறக்கும் பரத்



'பட்டியல்' படத்தில் காது கேட்காத வாய்பேச முடியாத வாலிபராக நடித்து அசத்தியிருக்கும் பரத்க்கு பாராட்டு குவிகிறதாம். விஜய், விக்கரம், சூர்யா போனில் பரத்தை அழைத்துப் பாராட்டி இருக்கிறார்கள்.

இதுபோல ஜோதிகா, திரிஷாவும் போன் மூலம் பாராட்டு தெரிவித்துள்ளனர். இதுதவிர, நேரிலும் பாராட்டு குவிந்து வருகிறது. திரை உலக முக்கிய பிரமுகர்கள் எல்லோருடைய பாராட்டுக்களுடன் ரசிகர்களின் ஆரவாரத்தையும் கேட்கும் போது அந்தரத்தில் பறப்பது போல இருக்கிறது என்கிறார் பரத்.

தொடர்ந்து சாதித்தால் இன்னும் உயரமாக பறக்கலாம்.




தவறு செய்து பதவியைப் பிடித்த அரசியல்வாதியை மிரட்டி, நாட்டுக்கு நல்லது செய்யும் இளைஞனின் கதை.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படும் முதல் - அமைச்சர் திடீர் என்று மரணம் அடைகிறார். அவருக்குப் பதிலாக அமைச்சர் ஒருவரை முதல்வராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அரசியல் சூழ்நிலையால் நாட்டில் நடக்கும் சீர்கேடுகளைப் பார்த்து சுதேசி என்ற கிராமத்து இளைஞன் கொதித்து எழுகிறான்.

நாட்டை ஒழுங்குபடுத்த சரியான நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். இந்த நிலையில் புதிய முதல் அமைச்சர் எப்படி சதி செய்து பதவிக்கு வந்தார் என்ற ரகசியம் சுதேசி கையில் ஆதாரத்துடன் கிடைக்கிறது. அதற்குக் காரணமான முதல்வரின் அரசியல் ஆலோசகர் ராகவாச்சாரியையும் அவன் கடத்திச் செல்கிறான்.

முதல் அமைச்சரிடம் ரகசியத்தைச் சொல்லி அவரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் சுதேசி, மனதில் தோன்றும் நல்ல திட்டங்களை முதல் -அமைச்சர் மூலம் நிறைவேற்றுகிறான்.

பதவிக்கு வர அரசியலில் நடக்கும் தில்லுமுல்லுகள் என்ன? அதைத் தடுக்க தனி மனிதனாக இருந்து சுதேசி எடுக்கும் முயற்சிகள் என்ன? தடைகளை உடைக்க அவன் செய்யும் சாதுர்யங்கள் என்ன? என்பதை விஜயகாந்த் அரசியல் பிரவேசத்தை மனதில் வைத்து லாவகமாக சொல்வது மீதி கதை.

சுதேசியாக விஜயகாந்த். வழக்கம் போல் வீர வசனம் பேசி, அதிரடியாக சண்டை போட்டு அசத்துகிறார். 'முதலிலேயே வந்த காத்துக்கிட்டு இருப்பது எனக்குப் பிடிக்காது. கரெக்டான நேரத்திலதான் வந்திருக்கிறேன்' என்று வசனம் விஜயகாந்தின் அரசியல் பிரசேவத்தைச் சொல்லும் 'தடுத்தும் கேட்பேன், தட்டியும் கேட்பேன், சொல்லி அடிக்க



வந்திருக்கேன்டா', 'பதவி,பணம் தானாக வரும் யாரையும் எதிரியாக நினைக்கவில்லை' என்பது போன்ற வசனங்கள் ரசிகர்களின் ஆரவாரத்தைப் பெறும் விஜயகாந்தின் கருத்துக்கள். காதல் காட்சி பொருந்தவில்லை.

விஜயகாந்த் முறைப் பெண்ணாக ஆஷிமா. அடக்க ஒடுக்கமாக வந்து போகிறார். கிடைத்த வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார். அழகான தோற்றம்.

தாத்தாவாக எம்.என்.நம்பியார். முதல் அமைச்சராக சாயாஜி ஷிண்டே. சாதித்திருக்கிறார். வேண்டா வெறுப்பாக நல்ல காரியங்களைச் செய்வது வித்தியாசம். கோபப்படும்போது ஆவேசம்.

அரசியல் ஆலோசகராக வாச்சாரியாக வரும் புதுமுகம் கிருஷ்ணா அட்டகாசம் செய்கிறார். கருணாஸ் கலாட்டா கலகலப்பு. லிவிங்ஸ்டனும், அலெக்ஸ்சும் அசல் அரசியல்வாதிகளாக மாறியிருக்கிறார்கள். தலைவாசல் விஜய், மன்சூர் அலிகான், மனோஜ்கே, ஜெயன், சங்கீதா, கலைராணி ஆகியோரும் உள்ளனர்.

கதை, திரைக்கதை,வசனம், இயக்கம் - ஜேப்பி.ஏ.ஓய். புதியவர் என்றாலும் பொருத்தமாக கதையைச் சொல்லி விஜயகாந்த் ஆசையை நிறைவேற்றியிருக்கிறார். கதையின் முன்பகுதி தென்றல் பின்பகுதி மின்னல். ஆரம்பத்தில் சிறிது தொய்வு இருந்தாலும் இடைவேளைக்குப் பிறகு கதை செல்லும் வேகத்தில் குறைகள் எல்லாம் மறந்துவிடுகின்றன. சரியாகக் குறி வைத்து அடித்திருக்கிறார். அரசியல் வசனங்கள் பொருத்தமானவை.

கிச்சாஸ் ஒளிப்பதிவு கச்சிதம். ஸ்ரீகாந்த் தேவா இசையில் பாடல்கள் துள்ளல். தேர்தல் பிரசாரத்துக்கு இந்தப் படமும் கைகொடுக்கும்

***சுதேசி - விஜயகாந்தின் அரசியல் பிரவேச அதிரடி***

'சிவகாசி', 'ஆதி' 'சுதேசி', 'டிசம்பர் 26' ஆகிய படங்களுக்கு 'கிராபிக்ஸ்' செய்த 'டிஜிட்டல்' மேஜிக் அருள்மூர்த்தி, ஒன்றரை மணி நேரம் ஓடக்கூடிய கார்ட்டூன் படம் ஒன்றை தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார். குழந்தைகளைக் கவரக்கூடிய அந்தப் படத்தில், பிரபல கதாநாயகன் ஒருவரை நடிக்க வைக்க முயற்சி நடக்கிறது.



'மெர்க்குரிப் பூக்கள்'
ஸ்ரீகாந்த் – மீராஜாஸ்மின்

## சினிமாச் சிதறல்

## காமெடியில் ராஜூ சுந்தரம்



ரஜினியின் 'சிவாஜி' படத்தில் நடன மாஸ்டர் ராஜுசுந்தரம் ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன் ஆகியோரும் நடிக்கிறார்கள். இருவருமே காமெடி வேடத்தில் நடித்து இருக்கிறார்கள். இந்த கரக்டர் நன்றாக அமைந்து இருக்கிறதாம்.

இதனால் படம் வெளிவந்ததும் இருவருக்கும் காமெடி கரக்டர்கள் தேடி வரலாம் என்று பேசப்படுகிறது.

## மீண்டும் கோபிகா



கோபிகாவுக்குத் தமிழ்ப் படங்களில் வாய்ப்பு இல்லாததால் மலையாளப் படங்களில் தீவிர கவனம் செலுத்திவந்தார்.

தனுஷ்ஜோடியாக இவர் நடிப்பதாக அறிவிக்கப்பட்ட அசோக மித்ரன் படப் பிடிப்பு இதுவரை நடைபெறவில்லை. இப்போது 2 தமிழ் படங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

ஒரு படத்தில் பரத் ஜோடியாக கோபிகா நடிக்கிறார். படத்தின் பெயர் 'எம்டன்' சத்ய ஜோதி பிலிம்ஸ் இதைத் தயாரிக்கிறது. இயக்குபவர் திருமுருகன். இன்னொரு படம் 'பொரி' சூப்பர் குட்பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில் ஜீவா ஜோடியாக நடிக்கிறார் கலக்கும் ஏரல் இமான்.

## 'ராம்' நடிகரின் எளிமை

பெரிய பட அதிபரின் மகன் என்றாலும், 'ராம்' நாயகன் எந்த பந்தாவும் செய்வதில்லை. சொன்ன நேரத்துக்குப் படப்பிடிப்புக்கு வந்து விடுகிறார்.

கம்பனி கொடுப்பதை சாப்பிடுகிறார். 'அது' வேண்டும்.. 'இது' வேண்டும் என்று கேட்டு தயாரிப்பாளர்களைத் துன்புறுத்தாமல், எளிமையாக நடந்து கொள்கிறார். இந்தப் பண்பு நிச்சயமாக அவருடைய உயர்வுக்கு வழிகாட்டும் என்கிறார்கள் மூத்த நடிகர்கள்.

விக்ரம், சூர்யா படங்களுக்குத் தெலுங்கில் மவுசு ஏற்பட்டுள்ளதால் அவர்களுடைய பல தமிழ்ப்படங்கள் தெலுங்கில் டப்பிங் செய்யப்படுகின்றன.




லட்சுமி ராய்

# தி.மு.க.வால் தமிழ் நாட்டுக்கு ஆபத்து!

## வைகோ. ஆங்கில நாளிதழுக்குப் பேட்டி

(சென்னை)



**தி.மு.க.கூட்டணியில் இருந்து நான் விலகியதற்கு முக்கிய காரணமே, தமிழ்நாட்டின் எதிர்கால நலன் காக்கப்பட வேண்டும் என்பதுதான். தி.மு.க.வால், தமிழகத்தின் எதிர்கால நலனுக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ. ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:**

தி.மு.க வெற்றி பெற்றால் அது தமிழ் நாட்டுக்கும், தமிழர்களுக்கும் ஆபத்தாகி விடும். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தி.மு.க.வினரும், கருணாநிதி குடும்பத்தினரும் முடக்கி விடுவார்கள்.

மத்திய மந்திரி தயாநிதிமாறன் குடும்பத்தினர்தான் சன் டி.வி நடத்துகின்றனர். அப்படி இருக்கும் போது அவர் மத்திய மந்திரி சபையில் தகவல்தொடர்பு இலாகாவை வைத்திருப்பது நடத்தை விதிமுறைகளுக்கு எதிரானதாகும் மத்திய அரசுடனான இத்தகைய தொடர்பினால் அவர்கள் எல்லா ஆதாயத்தையும் பெறுகின்றனர்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நான் 4 தடவை ஆலோசனை நடத்தினேன். மத்திய அரசு உண்மையிலேயே ஜன நாயகத்தைக் காப்பாற்ற விரும்பினால், குறிப்பிட்ட தொழிலை தங்கள் கட்டுப்பாட்டுக்கள் வைத்திருப்பவர்களுக்கு அதே தொழில் சம்பந்தப்பட்ட இலாகாக்களை கொடுக்கக்கூடாது.

தமிழகத்தில் கருணாநிதி குடும்பத்தினர் ஆக்டோபஸ் மாதிரி பரவி வருகிறார்கள். அவர்கள் மற்ற தொழிகளிலும் நுழையக் கூடும். ஏற்கனவே ஆசிய அளவில் கருணாநிதி குடும்பத்தினர் தான் பெரும் பணக்காரர்களாக உள்ளனர்

### தேச நலனே முக்கியம்

தி.மு.க தலைவர் தன் கட்சியையும், மத்திய மந்திரிகளையும் தன் குடும்ப நலனுக்காக மட்டுமே பயன்படுத்துகிறார். நான் அப்படி அல்ல. என் கட்சியை விட தேச நலனே முக்கிய என்று நினைக்கிறேன்.

என்னையும், என் கட்சியையும் அழித்து விட வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டனர். இதனால் தான் நான் தி.மு.க கூட்டணியை விட்டு விலகினேன்.

எத்தனையோ கொடுமையான சம்பவங்களை நான் தாங்கிக்கொண்டேன். தி.மு.வினர் என்னை அவமானப்படுத்தியபோது கூட பொறுத்துக்கொண்டேன். ஆனால் தி.மு.க வெற்றி பெற்றால் அது ஒட்டு மொத்த தமிழ்நாட்டுக்கே அழிவை தந்துவிடும் என்ற நிலை ஏற்பட்டதால்தான் நான் அவர்களிடம் இருந்து விலகி வந்துள்ளேன்.

தி.மு.க.வின் குடும்ப டி.வியும் தி.மு.க தலைமையும் என்னை அவமரியாதை செய்ததற்கு எத்தனையோ உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். நான் வேலூர் ஜெயிலில் இருந்து வெளியில் வந்து முதன் முதலாகப் பேட்டி கொடுத்த போது 142 பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். ஆனால் அந்த டிவி வேண்டும் என்றே என்னை இருட்டடிப்பு செய்தது.

அது போல 2 மாதம் நான் நடை பயணம் வந்த போது திட்டமிட்டு என் செய்தி வராமல் பார்த்துக்கொண்டனர். கொட்டும் மழையில் நான் நடந்தேன். ஆனால் அந்த டி.வியில் வேண்டும் என்றே எனக்கு எதிராகப் பொய் செய்தியை ஒளிபரப்பினார்கள்.

### தி.மு.கவுடன் உறவு வைத்தமைக்கு காரணம்

தி.மு.க தலைமை செய்த அவமரியாதைகளைப் பொறுத்துக்கொண்டு தி.மு.க வுடன் உறவு வைத்தது ஏன் என்று பலரும் கேட்கலாம்.

அதற்குக் காரணம் என்னிடம் உள்ள 2 பலவீனங்கள் தான். ஒன்று எனக்கு எதிராக யார் என்ன தீமை செய்தாலும் எளிதில் நான் மறந்துவிடுவேன். இரண்டாவது மற்றவர்கள் செய்யும் சிறு உதவியைக் கூட நான் மறப்பதில்லை. அதனால் தான் இவ்வளவு நடந்தும் கூட கருணாநிதியை நான் வெறுக்கவில்லை. அவர் மீது எனக்கு உள்ள பற்றும் பாசமும் இன்னும் குறையவில்லை. இது தான் என் பலவீனம்.

1993ஆம் ஆண்டு என் மீது கொலைப் பழி சுமத்தி கட்சியிலிருந்து வெளியேற்றினார்கள். 30 ஆண்டுகளாக கட்சிக்கு உழைத்த எனக்குச் செய்யப்பட்ட பெரிய துரோகம் இது. தி.மு.கவில் நான் இருந்தபோது எந்தப் போராட்டமும் நான் இல்லாமல் நடந்தது இல்லை.

23 தடவை தி.மு.கவுக்காக சிறை சென்று இருக்கிறேன். ஒரு தடவை கூட நான் எம்.பி என்ற அந்தஸ்தைப் பயன்படுத்திச் சிறையில் சொகுசாக இருந்தது இல்லை.

'சி' வகுப்பில் என் தொண்டர்களோ ஒருவனாகத்தான் இருந்தேன். அதனால் தான் அவர்கள் என்னைத் தங்களில் ஒருவனாக நினைத்தனர்.

தி.மு.கவில் எனக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு உயர்வதைக் கண்ட கருணாநிதி பயப்பட்டார். ஸ்டாலினுக்கு மகுடம் சூட்ட ஆசைப்படும் அவர் நான் அதற்கு போட்டியாக வந்துவிடுவேன் என்று நினைத்தார். அதனால்தான் திட்டமிட்டு என்னை வெளியில் தள்ளிவிட்டனர்.

### அ.தி.மு.க.வில் எனக்கு நல்ல மரியாதை

ஆனால் அ.தி.மு.க.வில் என்னை மரியாதையாக நடத்துகின்றனர். அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்ததால் இலட்சக்கணக்கான ம.தி.முக.வினர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அ.தி.மு.க - ம.தி.மு.க கூட்டணிக்குத் தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலகம் முழுக்க தமிழர்களிடம் ஆதரவும் வரவேற்பும் கிடைத்துள்ளது.

எங்கள் கூட்டணியை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டில் இப்போது முதல் - அமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக 'மவுன அலை' வீசுகிறது. ஜெயலலிதா மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று தமிழக மக்கள் விரும்புகின்றனர்.

இயற்கை பேரழிவுகளை அவர் எதிர்கொண்ட விதத்தைப் பார்த்த மக்கள், ஜெயலலிதா நல்ல நிர்வாகத்தைக் கொடுப்பார் என்று நம்புகிறார்கள். எனவே நிச்சயம் தமிழ்நாட்டில் மீண்டும் அ.தி.மு.க.வின் பொற்கால ஆட்சி மலரும்.

முதல் -அமைச்சர் ஜெயலலிதா தமிழ் நாடு முழுவதும் ஏழை மாணவ - மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கியுள்ளார். இதன் மூலம் அவர் தமிழ் நாட்டில் சைக்கிள் புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறார்.

எம்.ஜி.ஆர்., மதிய உணவுத் திட்டம் மூலம் ஏழை மக்களின் இதயங்களில் வாழ்ந்தார். அது போல முதல் - அமைச்சர் ஜெயலலிதாவும் ஏழைகளுக்கு இலவச சைக்கிள் கொடுத்து பெற்றோர் உள்ளங்களில் நீங்காத அளவுக்குக் குடி கொண்டுள்ளார்.

எல்லாத் தரப்பு மக்களுக்கும் ஜெயலலிதா மேம்பாட்டு திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். எவர் என்ன பாடுபட்டாலும் ஜெயலலிதா மீண்டும் முதல்வர் ஆவதை தடுக்க இயலாது. (கு)

# சோனியாவின் இராஜினாமா தியாகமல்ல

## சமாஜ்வாடி கட்சி

(லக்னோ)

''காங்கிரஸ் தலைவர் சோனியாவின் இராஜினாமாவை தியாக செயலாக கருத முடியாது. கட்டாயத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே அது'' என்று சமாஜ்வாடி கட்சி கருத்துத் தெரிவித்துள்ளது.

இது குறித்து சமாஜ்வாடி கட்சி பொதுச் செயலர் ராம் கோபால் யாதவ் கூறியதாவது:

சோனியாவை அரசியல் தியாகியாக்க காங்கிரஸார் முயற்சிக்கின்றனர். இது முட்டாள் தனமானது. பதவி பறிக்கப்படும் என்ற அச்சத்தில் அவர் இராஜினாமாச் செய்துள்ளார்.

ஜெயாபச்சனை பழிவாங்க அவர் எடுத்த முயற்சியில் அவரே சிக்கிக்கொண்டார். ஜெயாபச்சன் மீது புகார் கூறியது மதன் மோகன் சுக்லா என்பவரே. இவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். காங்கிரஸ் தலைவர் சோனியா பாணியில் சமாஜ்வாடி தலைவர் அமர்சிங் இராஜினாமாச் செய்யமாட்டார். உ.பி. மேம்பாட்டு கவுன்சில், உ.பி.திரைப்பட வளர்ச்சி வாரியம் மற்றும் உ.பி நீர்ப்பாசன, வெள்ளத் தடுப்பு கமிஷன் ஆகிய மூன்று பதவிகளை ஆதாயம் தரும் பதவிகள் இல்லை என்று மசோதாவில் சேர்க்கும்படி மத்திய சட்ட அமைச்சர் பரத்வாஜுக்கு அமர்சிங் கடந்த 20ஆம் திகதி ஒரு கடிதம் மட்டுமே எழுதினார்.

மற்றவர்கள் கூறுவதுபோல் அவசர சட்டம் கொண்டு வர அவரும் ஆதரவு தெரிவித்தார் என்பது உண்மையல்ல. (கு)

# இளவரசர் சார்ள்ஸ், கமீலா இந்தியாவுக்கு விஜயம்

(புதுடெல்லி)

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் மனைவி டயானா கார் விபத்தில் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து தனது நீண்டநாள் காதலி கமீலாவைக் கடந்த ஆண்டு திருமணம் செய்துகொண்டார்.

புது மனைவி கமீலாவுடன் சார்ள்ஸ் ஏற்கனவே அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்தார். இப்போது கமீலாவுடன் சார்ள்ஸ் எகிப்து நாட்டில் சுற்றுப்பயணம் செய்கிறார். எகிப்து சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு சவூதி அரேபியாவுக்கும் அவர் செல்கிறார்.

3 நாடுகள் சுற்றுப் பயணத்தின் கடைசிக் கட்டமாக அவர்கள் இந்தியாவுக்கும் செல்கிறார்கள். இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தியா செல்லும் அவர்கள் ஒரு வாரம் சுற்றுப் பயணம் செய்வார்கள்.

கமீலாவைத் திருமணம் செய்த பிறகு சார்ள்ஸ் இந்தியா வருவது இதுவே முதல் தடவை. டெல்லியில் அவர்களுக்கு இங்கிலாந்து தூதரகம் சார்பில் வரவேற்பும், விருந்தும் அளிக்கப்படுகிறது.

இதில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியும் கலந்துகொள்கிறது.

ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களுக்கும் சார்ள்ஸ் செல்கிறார். பஞ்சாப் முதல் மந்திரி அம்ரீந்தர் சிங், சார்ள்ஸ் தம்பதிகளுக்கு விருந்து அளிக்கிறார். குருத்வாரா அனந்தப்பூர் சாகிப் சீக்கிய கோவிலுக்கும் சார்ள்ஸ் செல்லவிருக்கிறார். வேலைவாய்ப்பு, பாசன வசதி தொடர்பான நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்து கொள்கிறார். (கு)

# இராஜினாமாவை வாபஸ் பெறக்கோரி காங்கிரஸ் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்

(புதுடெல்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியாவின் இராஜினாமாவை அடுத்து அவரது வீட்டின்



முன்பாக ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கூடி இராஜினாமாவை வாபஸ் வாங்க வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பினர்.

ஆதாயம் தரும் பதவிப் பிரச்சினை தொடர்பாக தனது லோசபா எம்.பி. பதவியையும், தேசிய ஆலோசனைக் குழு தலைவர் பதவியையும் காங்கிரஸ் தலைவர் சோனியா கடந்த வியாழக்கிழமை இராஜினாமா செய்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அன்றையதினம் மாலையிலிருந்தே சோனியாவின் வீடு இருக்கும் ஜன்பத்சாலை முழுவதும் காங்கிரஸ் தொண்டர்கள் குவிந்த வண்ணம் இருந்தனர்.

இரவு முழுவதும் அங்கேயே தூங்காமல் விழித்திருந்த அவர்கள் சோனியா இராஜினாமாவை வாபஸ் பெற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். நேற்றுமுன்தினம் காலை இங்கு குவிந்த தொண்டர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்தது.

குழந்தைகள், பெண்கள் என காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஏராளமானோர் கைகளில் கொடியும், சோனியாவின் உருவப் படமும் ஏந்தியபடி வந்தனர். அப்போது இராஜினாமா முடிவை திரும்பப் பெற வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

நேரம் ஆக ஆக தொண்டர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால், ஜன்பத்சாலை உட்பட அப்பகுதி முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (கு)

## இந்திய வலம்



புதுடெல்லியில் நடைபெற்ற பா.ஜ.க.கூட்டத்தில் கலந்துகொண்ட தலைவர்கள்.

# இறுதி வெற்றியைத் தீர்மானிக்கப்போவது எங்கள் இராணுவப் பலம் தான் -கேணல் தீபன்







(கிளிநொச்சி)

எங்கள் இறுதி வெற்றியை தீர்மானிக்கப் போவது எங்கள் இராணுவப்பலம்தான் என்று விடுதலைப் புலிகளின் வட போர் முனை கட்ட ளைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்தார்.

இராணுவ சிறப்பு வேவுப்பிரிவு மாவீரர்கள் நினைவாக கட்டளைப் பணியகப் போராளிகளிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் சிறப்புரை யாற்றுகையில் கேணல் தீபன் இவ்வாறு தெரிவித்தார்.

பூநகரி முகாம் மீதான இராண்டாம் கட்ட வேவுப்பணியின் போது 10.3.1994இல் வீரச்சாவடைந்த கப்டன் கந்தையா, கப்டன் கரிகாலன், கப்டன்ரகு உட்பட எட்டு மாவீரர்களின் நினைவு நாளையொட்டி இப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்வில் கேணல் தீபன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அனைத்துவகையான சண்டைகளையும் நாங்கள் எதிர்கொள்ளக் கூடியவர்களாக மாற்றம் அடைவதன் மூலம்தான் நாம் அடுத்த கட்ட இறுதி இலக்கை வெல்ல முடியும் அதற்கு ஏற்ற வகையில் நாம் எங்களைத் தயார்ப்படுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக உயிர்திறந்த மாவீரர்களை நினைவில் கொண்டு எமது அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக நாம் தயாராக இருப்போம்.

ஏனென்றால் எங்கள் இறுதி வெற்றியை தீர்மானிக்கப்போவது எந்தப் பலமும் அல்ல அது எங்கள் இராணுவப் பலம்தான் என்றார்.

கடந்த புதன்கிழமை நடை பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கட்டளைத் தளபதிகளில் ஒருவரான வாகிசன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் ஏற்றினார். ஈகைச்சுடரினை வரைப்படப் பிரிவுப்பொறுப்பாளர் சசிகுமார் ஏற்றிவைக்க பொதுப்படத்திற்கான மலர்மாலையை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அணிவித் தார்.

இதன் பின்னர் அக வணக்கம் நடைபெற்றது. தொடர்ந்து பராதி இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களின் மாவீரர் நடனம் தேசியத் தலைவரை வாழ்த்தும் நடனம் நடைபெற்றன.

வெற்றி பெற்ற விளையாட்டுவீரர்களுக்கான பரிசில்களை கட்டளைத் தளபதிகேணல் தீபன், வரைப் படப்பிரிவுப் பொறுப்பாளர் சசிகுமார், கட்டளைப்பணியக தளபதிகளில் ஒருவரான ஜெரி ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர்.

விளையாட் டுப் போட்டியின்நடுவர்களாக கடமையாற்றிய விளையாட்டு அதிகாரிகளுக்கு கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் நினைவுப் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார். (க)

# தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்கும் க.பொ.த.(உ/த) பரீட்சார்த்திகள்

## கல்வித்திணைக்களங்களில் பதிவு செய்யவேண்டும் என நிபந்தனை

(கொழும்பு)

2007ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சாத்திகளாக தோற்றுவோர் தாம் வசிக்கும் பிரதேச மாகாண கல்வித்திணைக்களங்களில் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

3 பாடங்களுக்கு தோற்றும் ஒருவர் 675ரூபாவும் அதற்குக் குறை வான பகுதிப்பாடங்களுக்கு தோற்வோர் அதற்கு உரிய அளவிலும் கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

மாகாண கல்வித் திணைக் களத்தில் ப்திவு செய்யும் போது வழங்கப்படும் பதிவு இலக்கத்தை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது அதற்குரிய கூட்டில் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவேண்டும்.

மாகாண கல்வித் திணைக் களத்தின் பதிவிலக்கத்தை குறிப்பிட்டு விண்ணப்பிக்காத விண்ணப் பங்கள் பரீட்சைத்திணைக் களத்தினால் நிராகரிக்கப்படும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பாட சாலைகள் ஊடாகப்பூரணப் படுத்த வேண்டிய கணிப்பீடுகள் மற்றும் வாழ்க்கை தகைவிருத்திச் செயற் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கே மாகாண கல்வித் திணைக் களத்தில் பதிவு செய்யவேண்டும்.

தனிப்பட்ட பரீட்சாத்திகள் மாகாண கல்வித்திணைக் களத்தில் பதிவு செய்து கொள்வதன் மூலம் கணிப்பீடுகள் மற்றும் செயல் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மாகாண கல்வித் திணைக்களம் பாடசாலைகள் ஊடாகநிறைவுசெய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

21வயதுக்கு மேற்பட்ட பரீட்சாத்திகள் மாகாணக்கல்வித் திணைக் களத்தில் பதிவு செய்யாமல் நேரடியாக பரீட்சைக்கு விண்ணப்பிக் கலாம்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் எதிர்வரும் 31ஆம் திகதிக்குமுன்னர் பதிவுகளை மேற் கொள்ளுமாறு அறிவித்துள்ளது.

அத்துடன்பதிவுசெய்வது தொடர் பான மேலதிக விபரங்கள் மற்றும் மாகாண கல்வித்திணைக்களத் தில் பதிவு செய்வது தொடர்பான படிவங்களை வலயக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (து-9)

## மஹோற்சவம்

(துன்னாலை)

துன்னாலை ஆயில் மின் ரொல்லை விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நாளை திங்கட்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இனிதே நடை பெறும். (க-101)

# கொழும்பு மாநகர சபை வேட்பு மனு நிராகரிப்பு சட்டபூர்வமானதாம்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபைக்கான ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பு மனுவினை நிராகரிப்பதற்கு தேர்தல் அதிகாரிகள் எடுத்த தீர்மானம் சட்ட ரீதியானது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்கான ஐக்கிய தேசியக்கட்சி தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையினை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகளின் பின்னரே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் என். வி. கே.வேரகொட கடந்த மாதம் 21ஆம் திகதி மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் இம் மனுவினைத் தாக்கல் செய்தார்.

கே.சிறிபவன் மற்றும் சிசிரடி ஆப்ரோ ஆகி ய நீதியரசர்களின் முன் னிலையில் இம்மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்படிகடந்தபெப்ரவரி24ஆம் திகதி கொழும்பு மாநகரசபைக் கான உள்ளூராட்சித்தேர்தலை மார்ச் 30ஆம் திகதி நடாத்தாது இருக்குமாறு தடை உத்தரவொன்றை மேல் முறையீட்டு நீதிமன்றம் விதித்தது.

பின்னர் மேன் முறையீட்டு நீதி மன்றத்தின் இடைக்கால தடை உத்தரவுக்கு எதிராகதேர்தல்கள் ஆணையாளர் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தபோது அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்ட தடை உத்தரவினை நீக்குவதற்கு போதுமான அடிப்படைகள்இல்லை என உயர்நீதி மன்றம் குறிப்பிட்டது. இம்மனு கடந்த 13ஆம் திகதியில் இருந்து கடந்த 22ஆம் திகதிவரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றால் விதிக்கப்பட்ட தீர்ப்பில் 2004ஆம் ஆண்டுவேட்பாளர் பட்டியலுக்கு அமையவே இம் முறை தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான சுடன் லக்மால் 2005ஆம் ஆண்டுதான் 18 வயதைப் பூர்த்தி செய்கிறார்.

18வயது பூர்த்தியடையாத ஒருவரை வேட்பாளராக சேர்த்ததால் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பு மனுவை நிராகரிக்க தெரிவத்தாட்சி அலுவலகர் எடுத்த தீர்மானம் சட்ட பூர்வமானது என்று அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தீர்ப்பினை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய உள்ளதாக அதன் பிரதிப்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (க-4.9)

## தவக்கால சிந்தனை



"உன்னை நான் நினையாவிடில் என்நா மேல் வாயோடு ஒட்டிக் கொள்வதாக"

உயர்த்தப்பட்ட கிறிஸ்துவை நம்புகிறவர்கள் நிலையான வாழ்வைப் பெறுவர் இதுவே இன்றைய முக்கிய செய்தியாக ஒலிக்கிறது. உயர்த்தப்படுதல் எனும் வார்த்தை இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டதையும் குறிக்கிறது. "நீங்கள் மானிட மகனை உயர்த்தியபின்பு "இருக்கிறவர் நானே என்பதை அறிந்து கொள்வீகள் "(யோவா 8:28) "நான் மண்ணுலகில் இருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" (யோவா 12:32) எனும் யேசுவின் வார்த்தைகள் இதனைத்தெளிவுபடுத்துகின்றன. புனிதயோவானின் பார்வையில் சிலுவையில் உயர்த்தப்படுவதே கிறிஸ்துவின் மகிமையாக வெளிப்படக்காண்கிறோம். கிறிஸ்துவின் மரணம் எல்லாவற்றையும்விட இறைவன் நம்மை மிக ஆழமாக அன்பு செய்கிறார் என்பதை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய அன்பின் கனியாகிய இயேசு சிலுவையில் தன்னைப் பலியாக்கித் தரும் மீட்பின் கனியை நாம் சுவைப்போம். அவரது அன்பை விசுவாசித்து அறிக்கையிட்டு அனைவரையும் இந்த அன்பின் கனியை உண்ண அழைப்போம்.

காவலன்


## பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடங்கள்

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இரு பாலாரிடமிருந்தும் குடா நாடு அளாவிய ரீதியில் பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருத்தமானவர்கள் முழுப்பெயர் ,நிரந்தர முகவரி, தற்போது வசிக்கும் முகவரி (இருப்பின்) , தேசிய அடையாள அட்டை இலக்கம் , பால் , பிறந்த திக்தி, கி.சே.பிரிவு, பிரதேச செய்தியாளர் பிரிவு, தனிப்பட்ட வரா, திருமணமானவரா? கல்வித்தகைமை, மேலதிக தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் உறவினர் அல்லாத, தங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இரு வரின் பெயர் விலாசங்களுடன் கூடிய விண்ணப்பங்களை,

பிரதம ஆசிரியர் ,<br>
வலம்புரி,<br>
இல.3, 2ஆம் ஒழுங்கை,<br>
பிறவுண் வீதி ,<br>
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 31.03.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச செய்தியாளர் பதவி" எனத் தவறாது குறிப்பிடவும்.



## பதவி வெற்றிடங்கள்

உதவி ஆசிரியர் (பெண்கள் -பகல்), அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள் - பகல்), பாதுகாப்பு உத்தியோகத்தர், பத்திரிகை விநியோகஸ்தர்கள், உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவி ஆசிரியர் , அலுவலகச் செய்தியாளர்கள் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்த பட்சம் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தமிழ் மொழி யில் திறமைச் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இத் துறையில் குறைந்த பட்சம் 3வருட அனுபவம் உடையவர்களாக, அல்லது க.பொ.த.(உ/த) இல் வர்த்தக பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் . வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங் கள் 31.3.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல்,

பிரதம ஆசிரியர் ,<br>
வலம்புரி,<br>
இல.3, 2ஆம் ஒழுங்கை,<br>
பிறவுண் வீதி ,<br>
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் .

விண்ணப்பங்களை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

# பிலிப்பைன்சில் தீ விபத்து 1500 குடிசைகள் சாம்பல்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ஆயிரத்து 500குடிசைகள் நாசமடைந்தன். இந்த சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. உயிர்ச்சேதமும் இல்லை என்று தீயணைப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதியில் உள்ளது மின்டாநாவ் தீவு. இத்தீவில் உள்ள ஜம்போன்கா என்ற துறைமுக நகரத்தில் கடந்த வியாழக்கிழமை முன்னிரவில், கவனிப்பாரற்று கிடந்த மெழுகுவர்த்தியால் தீவிபத்து நேரிட்டது. தெருக்களில் தடைதடங்கல்கள் இருந்தாலும், குறைந்த தண்ணீர் அழுத்தத்தாலும், லேசான மூலப் பொருட்களால் உருவாக்கப் பட்ட வீடுகளில் தீ விரைந்து பரவியதைத் தடுக்க முடியவில்லை. தீயணைப்புத் துறை அதிகாரிகள் ஏழு மணிநேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்தத் தீவிபத்தில் ஆயிரத்து 500 குடிசைகள் நாசமடைந்தன. ஐந்தாயிரம் பேர் வீடுகளை இழந்துவிட்டனர். இவர்கள் தற்காலிகமாக அரசு நடத்தும் பள்ளிக்கூடங்களிலும், சமுதாய கூடங்களிலும் தங்கவைக்கப்பட்டனர். மோசமான இந்த தீவிபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை மற்றும் நிவாரணப் பொருட்களை அளித்து உதவுமாறு மேயர் கோரிக்கை விடுத்துள்ளார்.



இந்தத் தீ விபத்தில் சில வியாபார நிறுவனங்கள் உட்பட ரூ.4கோடியே 50 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமடைந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (து)

உலக தரிசனம்



லாகூரில் பாகிஸ்தான் தேசிய தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் அதிபர் முசாரப்பும், பிரதமர் சவுகத் அசிஸ்சும் கலந்து கொண்டனர்

# பிஜி பிரதமருக்கு எதிராக இந்தியர்கள் போராட்டம்

பிஜி தீவில் இப்போது பிரதமராக இருப்பவர் லைசினியா காரசி. இவர் சமீபத்தில் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பிஜி தீவில் வாழும் இந்தியர்கள் மற்றும் இதர வெளிநாட்டவர்கள் பற்றி அவதூறாக பேசியதாகப் புகார் எழுந்தது.

பிஜி தீவைச் சேர்ந்த ஒருவர்தான் பிரதமராக இருக்கவேண்டும்.

மற்ற நாட்டவர்களுக்கு பிஜி தீவின் மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ள முடியாது என்றும் பேசினார். இது மற்ற நாட்டு வம்சா வழியினரிடம் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அவருக்கு எதிராக இந்திய வம்சா வழி யினர் மற்றும் அங்கு வாழும் இதர நாட்டினர் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

மற்ற நாட்டவர்களை அவமதித்தும், அரசியல் சட்டத்துக்கு முரணாகவும் பேசியதாக அவர் மீது புகார் கூறியுள்ளனர்.

பிரதமர் லைசீனியா நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். (து)

# தென்கொரிய பிரதமராக பெண் ஒருவர் நியமனம்

(சியோல்)

தென்கொரிய பிரதமர் பதவிக்கு பெண்கள் உரிமைக்காக போராடியவரான ஹான் மெயாங் சூக் என்பவரின் பெயரை அந்நாட்டு ஜனாதிபதி ரோ மூ-ஹைன் அறிவித்துள்ளார்.



தென்கொரியாவின் பிரதமராக ஆளும் யூரி கட்சியைச் சேர்ந்த லீ ஹே-ஜான் இருந்தார். நாட்டில் ரயில்வே ஊழியர் போராட்டம் நடந்த போது பெரும் குழப்பம் ஏற்பட்டது.

இந்த நெருக்கடியான நேரத்தில் லீ, வர்த்தக பிரமுகர்களோடு கோல்ப் விளையாடிக் கொண்டிருந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை கிளப்பியது. லீயின் இந்தச் செயல் பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. இதையடுத்து, அவர் தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்தார்.

இந்நிலையில், தென்கொரியாவின் அடுத்த பிரதமராக பெண்கள் உரிமைக்காகப் போராடியவரான ஹான் மெயாங் சூக்கின் பெயரை ஜனாதிபதி ரோ-மூ-ஹைன் நேற்று முன்தினம் அறிவித்தார். பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்குப் பின்பு ஹான் புதிய பிரதமராக தேர்வு செய்யப்படுவார் எனத் தெரிகிறது. ஹான் பிரதமராவதற்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தால், இவரே தென்கொரியாவின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெறுவார்.

இதுதொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பில், 61வயது நிரம்பிய ஹான் தனது மென்மையான அணுகுமுறையால் அரசின் முக்கியமான கொள்கைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவார் எனக் கூறப்பட்டுள்ளது.

ஹான் பெண்ணுரிமைக்காகவும், சுற்றுச்சூழல் கொள்கைக்காகவும் தனது வாழ்வில் பெரும்பகுதியை செலவு செய்தவர். ஜனநாயக உரிமை கோரி போராடியதற்காக 1979ஆம் ஆண்டிலிருந்து 1981ஆம் ஆண்டுவரை சிறைவாசம் அனுபவித்தவர்.

கடந்த 2001ஆம் ஆண்டு ஆண் பெண் சம உரிமைத்துறை அமைச்சகம் முதல் முதலாக தென்கொரியாவில் ஏற்படுத்தப்பட்ட போது அத்துறையின் அமைச்சராக இருந்தார். பின்னர் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் பொறுப்பையும் வகித்தார்.

ஏற்கனவே சாங்சங் என்ற பெண் பிரதமர் பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்டார். ஆனால், அவர் பிரதமராவதற்கு பார்லிமெண்ட் ஒப்புதல் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தென்கொரியாவை பொறுத்தவரை பிரதமர் பதவி என்பது அலங்கார பொம்மை பதவிதான். முழுக்க முழுக்க ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் தான் பிரதமர் செயல்படுவார். தென்கொரிய அரசியல் சட்டப்படி, ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியான 15 நாட்களில் பார்லிமெண்ட் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அறிவிப்பு வெளியான 20 நாட்களில் பார்லிமெண்ட்டில் பிரதமர் பதவிக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். (தி)


# பாகிஸ்தானில் மோதல் 20 தீவிரவாதிகள் பலி!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆப்கன் எல்லை அருகே தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் அதிகாலை நடந்த சண்டையில் 20 தீவிரவாதிகளும், ஒரு இராணுவ வீரரும் பலியாயினர். இரண்டு பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் வடக்கு வாசீரிஸ்தானில் தாத்தா கீயில் என்ற கிராமம் உள்ளது. ஆப்கானிய எல்லை அருகே உள்ள இந்தக் கிராமம் பழங்குடி இனத்தவர் வசிக்கும் பகுதி. எப்போதும் கலவரம் நடக்கும் இந்தப் பகுதியில், பாகிஸ்தான் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் அதிகாலையில் தீவிரவாதிகள் ராக்கெட் தாக்குதல் நடத்தினர்.

உடன் இராணுவத்தினரும் பதிலடி கொடுத்தனர். இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்த மோதலில், 20 தீவிரவாதிகளும், இராணுவ வீரர் ஒருவரும் பலியாயினர். (து)



பாரிஸ் நகரில் நடந்த ஊர்வலத்தில் வன்முறை வெடித்து தெருக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட கார்களை அடித்து நொறுக்கி கலவரக் காரர்கள் தீ வைத்து எரித்தனர்.

# புதிய ரொக்கெட் கடலில் வீழ்ந்தது

அமெரிக்காவின் விண்வெளி தொழில்நுட்ப கழகம் சார்பில் பால்கன்-1 என்ற ரொக்கெட் செலுத்தப்பட்டது. பால்கன்-2 என்ற செயற்கைக் கோளும் இதில் அனுப்பப் பட்டது.

பசுபிக்கடல் பகுதியில் உள்ள மார்ஷல் தீவில் இருந்து ஏவப்பட்ட இந்த ரொக்கெட்டில் புறப்பட்ட சிறிது நேரத்தில் கோளாறு ஏற்பட்டது.

நடுவானிலேயே இது வெடித்துச் சிதறி கடலில் வீழ்ந்தது. மிகக்குறைந்த செலவில் ரொக்கெட்டுக்களை தயாரிக்கும் இந்த நிறுவனம் அடுத்த ஆண்டு கடைசியில் மீண்டும் இதே போல் ஒரு ரொக்கெட்டை செலுத் தத் திட்டமிட்டு இருக்கிறது. (து)



பிரான்ஸ் நாட்டில் அரசின் புதிய வேலை வாய்ப்பு சட்டத்தை எதிர்த்து நைஸ் நகரத்தில் நடந்த கண்டன ஊர்வலத்தில் ஏராளமான இளம் பெண்கள் கலந்து கொண்டனர்.

# தீவிரவாதியின் துப்பாக்கிச் சூட்டில் பேக்கரி ஊழியர்கள் நால்வர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதி ஒருவன் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியதில் பேக்கரி ஊழியர்கள் நான்கு பேர் பலியாயினர். தீவிரவாதி விட்டு சென்ற வெடிகுண்டுப் பெட்டி வெடித்ததால் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

ஈராக்கில் உள்ள சாய்தியா மாவட்டத்தில் பேக்கரி ஒன்று உள்ளது. இந்தப் பேக்கரியைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று முன்தினம் வழக்கம்போல் தங்களது பணிகளை கவனித்துக்கொண்டிருந்தனர். அப்போது இயந்திர துப்பாக்கியுடன் பேக்கரிக்குள் நுழைந்த ஒரு தீவிரவாதி ஊழியர்கள் மீது சரமாரியமாக துப்பாக்கிச் சூடு நடத்தினான். இந்தத் தாக்குதலில் பேக்கரி ஊழியர்கள் நான்குபேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதி சம்பவம் நடைபெற்ற இடத்தில் ஒரு பெட்டியை விட்டுச் சென்றான் இதைத்தொடர்ந்து சம்பவ இடத்திற்கு ஈராக் பொலிஸார் விரைந்து வந்து சோதனையில் ஈடுபட்டனர். தீவிரவாதி விட்டுச்சென்ற பெட்டியை பொலிஸ் அதிகாரி ஒருவர் திறந்து பார்த்தார். ஆனால் எதிர்பாராதவிதமாக அந்தப் பெட்டி பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியதால் பெட்டியைத் திறந்து பார்த்த பொலிஸ் அதிகாரி பரிதாபமாக உயிரிழந்தார். அவருடன் வந்த மற்றொரு பொலிஸ்காரரும் காயமடைந்தார்.

தீவிரவாதிகள் மீது ஈராக் அரசு நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்கும் விதமாக இந்த சம்பவம் நடைபெற்றதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர். இதற்கிடையே, ஈராக்கில் ஷியா மற்றும் சன்னி பிரிவு முஸ்லிம் மக்களிடையே நடந்துவரும் உள் நாட்டு கலவரத்தை கட்டுப்படுத்த போதிய நடவடிக்கை எடுக்காதது குறித்து அந்நாட்டு அரசின் மீது அமெரிக்கா விமர்சனங்களை தெரிவித்து வருகிறது.

'கலவரங்களை விரைவில் கட்டுப்படுத்துவோம்' என்று ஈராக் பிரதமர் இயாத் அல்லாவி நம்பிக்கை தெரிவித்துள்ளார். (து)

தீய எண்ணங்களுக்கு எப்பொழுதாவது சிறிதேனும் இடங்கொடுத்துவிட்டால் பின் உறுதியுடன் நன்மையை நாடுதல் கஷ்டமாய்விடும்.
-ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## மாணவர்கள் மீதான தாக்குதல் சமாதானத்தை அடியோடு பாதிக்கும்

யாழ்.உயர் தொழிநுட்ப நிறுவனத்திற்குள் புகுந்த இராணுவத்தினர் மாணவர்கள் மீது நடத்திய தாக்குதலில் பதினைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

அன்னை பூபதியின் நினைவு நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் மீதே இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுல் படுத்துவதென்ற முடிபு எட்டப்பட்ட போதிலும், யுத்த நிறுத்த மீறல்களில் படையினர் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

இதன் ஒரு வெளிப்பாடே யாழ்.உயர் தொழிநுட்ப மாணவர்கள் மீதான தாக்குதலாகும். ஏற்கனவே யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலால் பல்கலைக்கழக விரிவுரைகளை மாணவர்கள் பகிஷ்கரித்து வந்தனர்.

இந் நிலைமை ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் தணிந்துபோய், மாணவர்கள் விரிவுரைக்கு சமுகம் கொடுத்துள்ள நிலையில்,

தற்போது உயர் தொழிநுட்ப மாணவர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இவ்வாறு மாணவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதன் ஊடாக- தமிழ் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஸ்தம்பிதம் அடையச் செய்வது படையினரின் நோக்காக உள்ளது என்பது தெளிவாகின்றது.

அகிம்சை வழி நின்று உண்ணாவிரதப் போராட்டத்தில் உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவு நாளை மாணவர்கள் அனுஷ்டிப்பதை எவ்வகையிலும் தவறான கண் கொண்டு பார்க்க முடியாது.

அகிம்சை வழிப் போராட்டத்தை மேற்கொண்டு அதில் உயிர் நீத்த ஒருவருக்கு மாணவர்கள் அஞ்சலி செலுத்தும் உரிமைகூட இல்லையாயின், இராணுவத்தினர் தமிழ் மக்களுக்கு எந்த உரிமையையேனும் வழங்க அனுமதிப்பார்களா? என்பது கேள்விக்குரியது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிபுகளின்படி உயர் கல்வி நிறுவனம் ஒன்றிற்குள் படையினர் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்துவது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இவ்வாறு இராணுவம் நடந்து கொள்வதானது சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்குடையதாகும்.

அதேவேளை யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் இராணுவ ஆட்சி நடக்கின்றதா? என்ற வினாவையும் பிரஸ்தாப சம்பவம் எழுப்பியுள்ளது. ஜனாதிபதியின் கட்டளைகள் மற்றும் முடிபுகளுக்குக் கட்டுப்படாமல் இராணுவம் செயற்படுவதை மாணவர்கள் மீதான தாக்குதல் உணர்த்தியிருப்பதால்,

இதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கப் போவது உறுதியாகிவிட்டது.

# அரசாங்கத்தின் ஆதரவுடனேயே கிழக்கில் துணை இராணுவக் குழுக்கள் இயங்கி வருகின்றன!

## நிமல்கா பெர்னாண்டோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஆதரவுடன் கிழக்கில் துணை இராணுவக் குழுக்கள் இயங்குவதாக அனைத்து வகையின ஒதுக்கல்கள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சர்வதேச அமைப்பின் தலைவர் நிமல்கா பெர்ணாண்டோ குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர் காணலில் எங்கள் நாட்டில் இன ரீதியான ஒடுக்குமுறை உள்ளது. சிங்கள தீவிரவாதிகள் அரசாங்கத்தில் இடம்பெற்றுக் கொண்டு தன்னாட்சிக்கும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் பல ஆண்டுகளாக போராடுகின்றனர். தமிழர் தலைமை பீடத்திற்கு எதிராக பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஒரு தோல்வி அடைந்த நாடு என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் இலங்கை. ஏனெனில் காரணி ஆதிக்கத்திற்குப்பின்னர் பல்லின, பல்கலாசார, பல்மத, அரசியல் நெறிகளை கடைப்பிடிக்காத ஒரு நாடு.

### யுத்தம் வெடித்தது

இதன் விளைவாகத்தான் இனப்பிரச்சினை உருவானது. இந்த இனப்பிரச்சினையால் இரு தசாப்த காலத்திற்கும் மேலான யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். கா[illegible]மல் போயினர்.

இந்த பெருமளவிலான உயிரிழப்புக்களை தமிழினமே சந்தித்தது. பல இலட்சக்கணக் கான மக்கள் உள் நாட்டிலும் வெளி நாட்டிலுமாக இடம்பெயர்ந்தனர். அந்த இனத்தையே ஒட்டு மொத்தமாக அழித்துவிட்டது.

கடந்த 2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த நிலையிலும் இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நவம்பர் 19ஆம் திகதிபதவி ஏற்ற பின்பு போர்ச்சூழல் உருவாகியுள்ளது.

வடக்கு–கிழக்கில் வன்முறைகள் வெடித்தன. நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் நிராயுதபாணிகளான பொதுமக்களே.

### அரசின் பாரபட்சம்

அரசியல் படுகொலைகள் தொடர்பாக அரசாங்கம் எதுவித விசாரணையையும் நடத்தவில்லை. அரசாங்கத்தின் ஆதரவுடன் துணை இராணுவக்குழுக்கள் இயக்கப்பட்டு கிழக்குப் பகுதியில் வன்முறைகளையும் கொலைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் கூட அவர்கள் மீதான வன்முறை குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர்.

### யுத்தத்தின் பின் ஆழிப்பேரலை

இவை தவிர போருக்குப்பின்னர் இலங்கையின் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் மீது மற்றொரு தாக்குதலாக ஆழிப் பேரலை நிகழ்ந்தது. தென்னிலங்கையில் மீளமைப்பும் புனரமைப்பும் பெருமளவில் முன்னெடுத்துச்செய்யப்பட்டன. வடக்கு கிழக்குப் பிரதேசம் புறக்கணிக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்தவின் அம்பாந்தோட்டைத்தொகுதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரின் தேவைக்கும் அதிகமாக 500வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

ஆனால் வடக்கு- கிழக்கில் நூற்றுக்கணக்கானோர் இன்னமும் இடைத்தங்கல்முகாம்களிலேயேவாழ்ந்துவருகின்றனர்.

இது விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை கூட உரிய முறையில் கவனம் எடுக்கவில்லை. ஆனால் அக்சன் எய்ட் என்ற அமைப்பு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரின் மனித உரிமைமீறல் தொடர்பான அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ளது.

### மொழிப்பிரச்சினை

இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் மொழி ரீதியாக ஒடுக்கு முறைக்குள்ளாக்கி வருகின்றனர். இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாக தமிழ் இருந்த போதும் அதை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. தமிழர்கள் கைது செய்யப்பட்டு ஒப்புதல் வாக்குமூலங்களை சிங்களத்தில் கட்டாயப் படுத்திவாங்குகின்றனர். அவர்களுக்கு அதில் என்ன இருக்கிறது என்றே தெரியாது. வடக்கு –கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதி பொலிஸ் நிலையங்களில் நன்கு தமிழ்தெரிந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவதில்லை. அஞ்சல் நிலையங்களில் தமிழில் தந்தி அனுப்பும் வசதிகூட இல்லை.

### பெண்கள் மீதான ஒடுக்கு முறைகள்

பெண்கள்தான் அதிகளவில் ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். போர்க்காலம் முழுமைக்கும் தமிழ் பெண்கள் மீதான ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்திலும் அது நீடித்தது.

கடந்த டிசம்பர் மாதம் முதல் வடக்குக்கிழக்கில் அரச படைகளின் அட்டூழியங்களும் சித்திரவதைகளும் பெண்களுக்கு எதிராக அதிகரித்திருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணம், புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் பட்டுபடுகொலை செய்யப்பட்ட தர்சினி என்ற இளம் பெண்ணின் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையை இன்னமும் அரசாங்கம் தாக்கல் செய்யப்பட வில்லை. அப் பெண்ணின் சடலம் கடற் படை முகாமுக்கு அருகில் இருந்த பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது.

சிறுபான்மை இனங்களும் தேசிய இனங்களும் உலகம் முழுமைக்கும் உருமைக்காக அரசுக்காக போராடி வருகின்றன. அமெரிக்க அதிபர் புஷ் எண்ணெய்த்தாகம் கொண்டுள்ளார். இன ஒதுக்கல் என்பது எந்த நிலையில் நிகழ்த்தப்பட்டாலும் அதை எல்லா நிலைகளிலும் எதிர்த்துப்போராடவேண்டியது அவசியம்.

### இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணவேண்டும்

ஜெனீவாவில் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களை நாம் வரவேற்கிறோம். எனெனில் இலங்கை மீண்டும் யுத்தத்திற்கு போகமுடியாது. மக்கள் ஆழிப்பேரலையாலும் போரினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகையால் பேச்சுக்கள் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும். இப்பேச்சுக்களில் நாம் நேரடியாக பங்கேற்காவிட்டாலும் போதுமக்கள் அமைப்பு என்கின்ற வகையில் அமைதி முயற்சிகளை ஆதரிக்கிறோம். அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் பேசுகிறோம் இரு தரப்பு நம்பிக்கையையும் அமைதியை யும் கட்டியெழுப்ப முயல்கிறோம். இந்த பிரச்சினைக்கு யுத்தம் மூலம் இல்லாமல் பேச்சுக்கள் மூலமான தீர்வு காண்பதற்கான மன நிலையை சிங்களவர் மத்தியில் உருவாக்க முயற்சித்து வருகிறோம் என்றார். (க)

## யாழ். குடாநாட்டில் தரைக்கீழ் நீரைப் பாதுகாக்க விசேட திட்டம் அமுலாகும்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம் யாழ். குடாநாட்டின் தரை கீழ் நீரை பாதுகாப்பதற்கும் நீண்ட காலத்திற்கு அந்நீரை பயன்படுத்துவதற்கும் பல புதிய திட்டங்களை அமுல்படுத்துமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு சுற்று நிருபங்களை அனுப்பி வைத்துள்ளது.

குறிப்பாக இந்த புதிய திட்டங்கள் விவசாயிகளுக்காகவே அமுல்படுத்தப்படவுள்ளன. இதன்படி விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் நீர் இறைக்கும் இயந்திரத்தின் குழாய்கள் ஒன்றரை அங்குலம் விட்டமுடையதாக இருக்கவேண்டும் அதற்கு மேற்பட்ட விட்டமுடைய குழாய்களை பயன்படுத்த முடியாது.

மேலும் நீர் இறைக்கும் இயந்திரத்தின் வலு 1.5 குதிரைச் சக்திக்கே மேற்படாதவையாக இருப்பதுடன் 90 நிமிடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக நீர் இறைக்கக்கூடாது. அத்துடன் விவசாய தேவைக்காக வெட்டப்படும் கிணறுகள், குழாய்க் கிணறுகள் பிரதேச சபையின் அங்கீகாரத்தின் பின்பே மேற்கொள்ளப்படவேண்டும் என வடக்கு–கிழக்கு மாகாண அமைச்சில் இருந்து யாழ்.மாவட்ட பிரதேச சபைகள், நகர சபைகளுக்கு சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் தரை கீழ் நீர் மட்டம் வெகுவாக குறைந்து தரை கீழ் நீரின் தன்மை அண்மைய ஆண்டுகளில் மாறியிருக்கின்றது. விவசாயத்தேவைகளுக்காக அதிகளவு நீர் உடனடியாக வெளியேற்றப்படுவதால் தரை கீழ் நீர் உவர்த்தன்மை வாய்ந்ததாக உருவாகும் சூழல் காணப்படுகின்றது.

இதனால் மேற்படி விடயங்களை சரியான முறையில் அமுல்படுத்துமாறும் வேண்டிய ஆலோசனைகளையும் ஒத் துழைப்புக்களையும் மாவட்ட நீர்ப்பாசண திணைக்களம் மற்றும் தேசிய நீர் வடிகால் புனரமைப்பு சபையிடம் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க-7)

## உருக்கிய உலோகப் பொருட்களுக்கான ஏற்றுமதி வரியை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

உலோகங்களை உருக்கும் தொழிற்சாலைக்கு தேவைப்படும் மூலப்பொருட்களுக்கான ஏற்றுமதி வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென்று திறன் அபிவிருத்தி தொழில் சீரமைப்பு அமைச்சர் சிறீபதி சூரியாராச்சி தெரிவித்தார்.

உருக்கிய உலோகப் பொருட்களை ஏற்றுமதி செய்வோருக்கு இதனால் அதிக இலாபம் கிடைக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

உலோகங்களை உருக்கும் கைத்தொழிலாளர்கள் பல கஷ்டங் களை எதிர்நோக்கி வருவதால் அரசு அவர்களுக்கு மேலும் பல சலுகைகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது என்றும் கூறினார். (க-7)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஒளி இல்லாமல் எந்தப் பொருளையும் பார்க்க இயலாது. அது போலவே ஆராய்ச்சி இன்றி ஞானம் பெற இயலாது. இந்த பிரபஞ்சம் முழுவதும் அஞ்ஞானத்தையே ஆதியாகக் கொண்டிருக்கிறது. இது ஞானத்தில் கரைந்து விடும்.

சுவாமி விவேகானந்தர்

# புலிக்கொடியேற்றப்பட்டு நினைவு நாள் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

அன்னைபூபதியின் 18ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் நேற்றும் தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் இந்நிறுவனத்தில் தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டமையை அடுத்து இராணுவத்தினரால் மாணவர்கள் தாக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனால் தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு நினைவு நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அப் பகுதியில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்த போதிலும் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தொழிநுட்பக் கல்லூரி மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்திலும் தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# பல்கலைக்கழக விடுதி மாணவர்களுக்கு இராணுவத்தினரால் அச்சுறுத்தல்

## மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விடுதி வளாகத்திற்குள் அத்துமீறி சென்ற இராணுவத்தினர் அங்கிருந்த மாணவர்களை அச்சுறுத்திச் சென்றுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இம் மாத ஆரம்பத்தில் உருவான ஓரளவான இயல்பு நிலை காரணமாகவிரிவுரைப் பகிஷ்கரிப்பை கைவிட்டு எமது கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்தோம். ஆனால் நேற்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையானது மாணவர்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. இந்நிலை தொடருமானால் எதிர்வரும் நாட்களில் குடாநாடு தழுவிய ரீதியில் பாடசாலைகள், கல்வி சார் நிறுவனங்கள் மற்றும் துறை சார் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பகிஷ்கரித்து எதிர்ப்பினை வெளிக்காட்ட வேண்டிவரும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வெளிவாரிப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்படும்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சை அலகினால் கலைமுதற் தேர்வு 2004/2005 மற்றும் வணிகமுதற் தேர்வு 2004/2005 ஆகிய கல்வியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகளை விரைவில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே மேற்படி கல்வியாண்டில் கல்வி கற்கும் வெளிவாரி பல்கலைக்கழக மாணவர்கள் பரீட்சைக்குத் தம்மைத் தயார் படுத்துமாறு வெளிவாரிப்பரீட்சை அலகின் பதிவாளர் கேட்டுள்ளார். (க-7)

## ஔவையார் விழா

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான ஔவையார் விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து விஷேச பூஜைகள் நடைபெறவுள்ளது. (ச)

## ஏப்ரல்...

தீர்வு காணப்படவுள்ளது.

இதேபோன்று கட்சி மறுசீரமைப்பு தொடர்பாகவும் தீர்க்கமான முடிபுகள் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அவ் வட்டாரம் மேலும் தெரிவிக்கின்றது. (ச-4)

## இளைஞன்...

கறுவாக்கேணியில் இருந்து குறிஞ்சி நகருக்கு சென்று கொண்டிருக்கும்போது இவர் கடத்தப்பட்டுள்ளார். அதன் பின்னர் அவரது சடலம் வாழைச்சேனை வெம்புப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. (ச)

## மீண்டும்...

மற்றும் இளைஞர் யுவதிகள் தொடர்ந்து கடத்தப்படுகின்றார்கள்.

எனவே அண்மைக்காலமாக எம்மால் நிறுத்தி வைக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மீண்டும் தொடங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என மட்டு., அம்பாறை பொங்கியெழும் மக்கள் படையின் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## இராணுவ...

படுகாயமடைந்தார். படுகாயமடைந்த வர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-4)

## சோதனையிட முயன்ற...

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

இலங்கையின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் நேற்று மதியம் 12 மணியளவில் குதிரைமலை என்கின்ற பகுதிக்கு 17 கடல் மைல் தொலைவில் ஒரு இழுவைப்படகு சந்தேகமான முறையில் வந்து கொண்டிருந்தது.

அதில் ஆறு பேர் இருந்தார்கள் என்றும் அதில் பெருமளவு ஆயுதங்கள் இருந்ததாகவும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து கடற்படையின் படகு சந்தேகமான முறையில் வந்து கொண்டிருந்த படகினை நோக்கிச் சென்றது. அப்படகில் சிங்களத்தில் பெயர் எழுதப்பட்டிருந்தது.

கடற்படை படகு அருகே சென்றவுடன் அப்படகில் இருந்தவர்கள் தங்கள் படகினை வெடிக்கச் செய்துவிட்டனர்.

இதனால் பெரியளவான வெடிப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. இவ்வெடிப்பின் தாக்கத்தால் கடற்படைப்படகு சேதமடைந்து கடலில் மூழ்கியது. அப்போது அக் கடற்படைப் படகில் இரண்டு அதிகாரி உட்பட 19 கடற்படையினர் இருந்தனர்.

அப்படகினை வழி நடத்திச் சென்ற அதிகாரி உள்ளிட்ட 11பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 8 பேரைக் காணவில்லையென இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார்.

சந்தேகத்திற்கிடமான இழுவைப்படகில் இருந்தவர்கள்படகில் இருந்த ஆயுதங்களுடன் பிடிபட்டுவிடுவோம் என்ற அச்சத்தில் தங்கள் படகினை வெடிக்கவைத்தார்கள் என்றும் எனினும் அவர்கள் கடற்படைப் படகினைத் தாக்கவில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு கருத்து தெரிவித்த புலித்தேவன் இத்தாக்குதலுக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறினார். (ச-4)


உயர்திரு.கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
(இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர்-வட பிராந்தியம்)
21.03.2006 ல் தமது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கையில் அவர்களை
வாழ்த்துகின்றோம்

















இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 26.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.